வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු

Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 20.02.2025 வியாழக்கிழமை இதழ் : 51 பக்கங்கள் : 12




### கொழும்பு - புதுக்கடை நீதிமன்றில்

# சாட்சிக் கூண்டுக்குள் வைத்து பிரபல ரௌடி சுட்டுக்கொலை!


- சட்டத்தரணி வேடமணிந்தவர் கைவரிசை
- பெண் ஒருவரும் கொலையாளிக்கு உதவி

கொழும்பு, பெப்ரவரி 20

**கொழும்பு புதுக்கடை நீதிவான் நீதிமன்றின் சாட்சிக் கூண்டுக்குள் வைத்து பாதாள உலகக் குழு பிரபலமான கணேமுல்லை சஞ்சீவ சுட்டுக்கொல்லப்பட்டார்.**

சட்டத்தரணியின் உடையில் வந்த துப்பாக்கிதாரி அவரை துப்பாக்கியால் சுட்டார். இதில், படுகாயமடைந்த சஞ்சீவ மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார் - என்று பொலிஸார் தெரிவித்தனர்.

11



## கொலைக்கு உதவிய பெண்ணுக்கு வலை!

கொழும்பு, பெப். 20

கொழும்பு - புதுக்கடை நீதிவான் நீதிமன்றுக்குள் வைத்து கணேமுல்லை சஞ்சீவ சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்துக்கு உதவிய பெண்ணை தேடும் பணி தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

11

## சஞ்சீவ கொலையாளி புத்தளத்தில் கைது!

### முன்னாள் படை சிப்பாய்



கொழும்பு, பெப். 20

புதுக்கடை நீதிமன்றத்துக்குள் வைத்து சுட்டுக் கொல்லப்பட்ட கணேமுல்லை சஞ்சீவ கொலை சந்தேக நபர் நேற்றுக் கைது செய்யப்பட்டார்.

புத்தளம் - பாலாவி பகுதியில் வான் ஒன்றில் பயணம் செய்து கொண்டிருந்தபோது கொலை சந்தேகநபரை விசேட அதிரடிப் படையினர் கைது செய்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் 34 வயதான முக மது அஸ்மான் ஷெரீப்தீன் என்று அடையாளம் காணப்பட்டுள்ளார். இவர் முன்னர் இராணுவத்தில் சிப்பாயாக பணியாற்றியவராவார்.

11

## சட்டத்தரணிகளும் சோதிக்கப்படுவர்!

### பொலிஸ் மா அதிபர் அறிவிப்பு

கொழும்பு, பெப். 20

நீதிமன்ற வளாகத்துக்குள் நுழைவதற்கு முன்பு சகல வழக்கறிஞர்களும் இனி சோதனைக்கு உட்படுத்தப்படுவார்கள் என்று பதில் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய அறிவித்துள்ளார்.

நேற்றைய தினம் கொழும்பு புதுக்கடை நீதிமன்றத்தில் கணேமுல்லை சஞ்சீவ சட்டத்தரணி வேடத்தில் வந்தவரால் சுட்டுக்கொல்லப்பட்டமையை

11

## செம்மணி மனிதப் புதைகுழியை நீதிவான் இன்று பார்வையிடுவார்!

யாழ்ப்பாணம், பெப். 20

யாழ்ப்பாணம் - செம்மணி மயானம் அருகே அண்மையில் கண்டுபிடிக்கப்பட்ட மனிதப் புதைகுழியை யாழ்ப்பாணம் நீதிவான் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பார்வையிடவுள்ளார்.

அண்மையில், செம்மணியிலுள்ள மயானம் ஒன்றில் கட்டடம் ஒன்றை அமைப்பதற்காக குழி தோண்டப்பட்டது. இதன்போது, மனித எச்சங்கள் காணப்பட்டன. இந்த விடயம் குறித்து மயானத்தின் நிர்வாக உறுப்பினர்களில் ஒருவரான கிருபாகரன் யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார்.

இது தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸார்

11

## தங்காலை துப்பாக்கி சூடு; தந்தை, மகள், மகன் பலி!

கொழும்பு, பெப். 20

தங்காலையில் நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டு சம்பவத்தில் 6 வயது மகள், 9 வயது மகன், 39 வயதான தந்தை ஆகியோர் உயிரிழந்தனர்.

நேற்றுமுன்தினம் இரவு தங்காலை - மீதெனிய - கடவத்தை சந்தி பகுதியில் மோட்டார் சைக்கிளில் சென்றவரை இலக்கு வைத்து துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டது. இதில், சம்பவ இடத்திலேயே தந்தையும் மகளும் உயிரிழந்தனர்.

உயிரிழந்தவரின் மகனான 9 வயது சிறுவன்

11

## கடவுச்சீட்டு வழங்கல் சேவை 24 மணிநேரமும் முன்னெடுப்பு

கொழும்பு, பெப். 20

குடிவரவு - குடியகல்வு திணைக்கள பிரதான பணிமனை 24 மணி நேரமும் இயங்க ஆரம்பித்துள்ளது என்று பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.

நேற்று புதன்கிழமை நள்ளிரவு முதல் இந்த நடவடிக்கை ஆரம்பமானது. அத்துடன், இனிவரும் நாட்களில் தினசரி 4 ஆயிரம் கடவுச்சீட்டுகளை விநியோகிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சர் ஆனந்த விஜயபால தெரிவித்துள்ளார்.

மேலும், நேற்று புதன்கிழமை முதல்

11

## உள்ளூராட்சி சபை தேர்தலுக்கான கட்டுப்பணத்தை மீளப்பெறலாம்!

கொழும்பு, பெப். 20

ஒத்திவைக்கப்பட்ட 2023ஆம் ஆண்டுக்கான உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கான கட்டுப்பணத்தை செலுத்தியவர்கள் தங்களது பற்றுச்சீட்டுகளை சமர்ப்பித்தால் கட்டிய பணத்தை மீளப் பெறமுடியும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கட்டுப்பணத்தை மீளப்பெற்றுக்கொள்வதற்கு கட்டுப்பணத்தை செலுத்தியபோது வழங்கப்பட்ட பற்றுச்சீட்டுகளின் பிரதியைச் சமர்ப்பித்தல் வேண்டும். அத்துடன், விண்ணப்பக் கடிதம் ஒன்றும் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

இதனடிப்படையில், எதிர்வரும் 28ஆம் திகதிக்குள் மாவட்ட தேர்தல் பணிமனைகளில் குறித்த ஆவணங்களைச் சமர்ப்பித்தால், வேட்பாளர்கள் தங்களின் கட்டுப்பணத்தை மீளப்பெற்றுக்கொள்ள முடியும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (ஐ)

## வேலன்சுவாமி, கஜேந்திரன் விசாரணைக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், பெப். 20

தையிட்டி திஸ்ஸ விகாரைக்கு எதிராக போராட்டத்தில் ஈடுபட்ட வேலன் சுவாமி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் கஜேந்திரன் ஆகியோரை பொலிஸார் விசாரணைக்கு அழைத்துள்ளனர்.

கடந்த 12ஆம்

11

## வலுவான பொருளாதாரத்துக்கு 'பட்ஜெட்' மூலமாக அடித்தளம்!

### ஜனாதிபதி அநுரகுமார தெரிவிப்பு



கொழும்பு, பெப். 20

கடந்த அரசாங்கங்களின் தவறான நிதி முகாமைத்துவம் காரணமாக வங்குரோத்தடைந்த நமது நாடு, தற்போது சர்வதேச நாணய நிதியத்தின் திட்டத்தின் கீழ் ஒரு குறிப்பிட்ட தகுதிகாண் காலத்தில் இருப்பதாகச் சுட்டிக் காட்டிய ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க, இந்த சூழ்நிலையில் ஒரு நாட்டைக் கட்டியெழுப்ப வலுவான பொருளாதாரத்தை உருவாக்குவதற்கான அடிப்படை நடவடிக்கை இந்த ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தின் ஊடாக எடுத்துள்ளதாகக் கூறினார்.

11

## யாழில் கடவுச்சீட்டு பணிமனை!

கொழும்பு, பெப். 20

குடிவரவு - குடியகல்வு திணைக்களத்தின் பணிமனை விரைவில் யாழ்ப்பாணத்தில் திறந்து வைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

புதிய பணிமனையை திறப்பதற்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தியடைந்துள்ளன என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபால தெரிவித்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டவிரோத மதுபான உரிமங்கள்

# ரணிலுக்கு எதிராக உயர்நீதிமன்றில் மனு

கொழும்பு, பெப். 20

**கடந்த ஆண்டு ஜனாதிபதி தேர்தல் அறிவிக்கப்பட்ட நாளிலிருந்து ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும் வரை மதுபான விற்பனை உரிமங்கள் சட்டவிரோதமாகவும் வெளிப்படைத்தன்மை இல்லாமலும் வழங்கப்பட்டிருப்பதால், உரிமங்களை ரத்து செய்ய உத்தரவிடக் கோரி, முன்னாள் நிதியமைச்சரும் முன்னாள் ஜனாதிபதியுமான ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்டோருக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமைகள் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

இந்த மனுக்களை மாத்தளையைச் சேர்ந்த தங்கவேலு தர்மேந்திர ராஜா மற்றும் புத்பிட்டியவைச் சேர்ந்த பிரசாத் தினுக பிரியதர்ஷன ஆகிய இரண்டு மதுபான உரிமதாரர்கள் சமர்ப்பித்துள்ளனர்.

முன்னாள் கலால் ஆணையர் ஜெனரல் எம்.ஜே. குணசிறி, முன்னாள் நிதியமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, நிதியமைச்சின் செயலாளர், இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழு உறுப்பினர்கள், தேர்தல் ஆணைக்குழு உறுப்பினர்கள், அமைச்சர்கள் வசந்த சமரசிங்க மற்றும் பிமல் ரத்நாயக்க மற்றும் கலால் துறை அதிகாரிகள் ஆகியோர் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதி தேர்தல் அறிவிக்கப்பட்ட ஜூலை 26 ஆம் திகதி முதல் ஜனாதிபதி தேர்தல் நடைபெற்ற செப்ரெம்பர் 21 ஆம் திகதி வரை சட்டத்திற்கு முரணான முறையில் வெளிப்படைத்தன்மை இல்லாமல் மதுபான விற்பனை உரிமங்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டதாக மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அனுமதிகள் ஜனநாயக தேசிய முன்னணியின் ஆதரவாளர்களுக்கும், அதற்கு ஆதரவளித்த பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் வழங்கப்பட்டதாக தாங்கள் அறிந்திருப்பதாக மனுதாரர்கள் கூறுகின்றனர்.

நிதியமைச்சர் என்ற முறையில் ரணில் விக்கிரமசிங்க, ஜனாதிபதித் தேர்தலின் போது தொழிலதிபர்களிடமிருந்து தனக்குத் தேவையான ஆதரவைப் பெறும் நோக்கில் இந்த உரிமங்களை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளதாக மனு தாரர்கள் குற்றம் சாட்டுகின்றனர். (அ)

தலதா மாளிகை மீது தாக்குதல் நடத்திய

# மக்கள் விடுதலை முன்னணி மன்னிப்புக் கோர வேண்டும்!

கபீர் காசிம் எம்.பி. வலியுறுத்து

கொழும்பு, பெப். 20

கண்டி தலதா மாளிகை மீது குண்டுத் தாக்குதல் நடத்திய மக்கள் விடுதலை முன்னணி மக்களிடம் மன்னிப்புக் கோர வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் கபீர் காசிம் வலியுறுத்தியுள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற 2025 ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் இரண்டாம் மதிப்பீடு மீதான இரண்டாம் நாள் விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

யாழ்ப்பாண நூலகம் எரிக்கப்பட்டமை தொடர்பில் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க தனது வரவு - செலவுத்திட்ட உரையில் கருத்து வெளியிட்டிருந்தார். உண்மையில் அந்த நூலகத்தை தமது கௌரவமாக யாழ்.மக்கள் பார்த்தார்கள். சிறுவர்கள் உள்ளே செல்லும்போது பாதணிகளை அகற்றி விட்டே செல்வார்கள். அவ்வாறான தொரு நூலகம் எரிக்கப்பட்டபோது ஐக்கிய தேசிய கட்சியின் இரண்டு அமைச்சர்கள் யாழ்ப்பாணத்தில் இருந்தார்கள். அதனால் ஐக்கிய தேசிய கட்சியே நூலகத்துக்கு தீ மூட்டியது எனத் தெரிவிக்கப்பட்டது. உண்மையில் எமது பெயர் அதனுடன் தொடர்புபடுத்தப்பட்டமை தொடர்பில் நாம் வருத்தமடைகிறோம்.

எனினும், ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கடந்த பாராளுமன்றத்தில் மக்களிடம் மன்னிப்புக் கோரியிருந்தார்.

அதேபோல, தலதா மாளிகை மீது குண்டுத் தாக்குதல் நடத்திய மக்கள் விடுதலை முன்னணி மக்களிடம் மன்னிப்புக் கோர வேண்டும்-என்றார். (அ)

# மீதெனிய துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துக்கு பின்னால் பாதாள உலகக் கும்பலின் தலைவர்?

கொழும்பு, பெப். 20

மீதெனிய பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கடேவத்த சந்திக்கு அருகில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் பாதாள உலக கும்பலின் தலைவர் ஒருவரால் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மீதெனிய, கடேவத்த சந்திக்கு அருகில் நேற்று முன்தினம் இரவு 10 மணியளவில் மோட்டார் சைக்கிளில் பயணித்துக்கொண்டிருந்த தந்தை, மகள் மற்றும் மகன் மீது இனந்தெரியாத நபர்கள் சிலர் துப்பாக்கிச் சூட்டை நடத்தியுள்ளனர்.

துப்பாக்கிச் சூட்டில் 39 வயதுடைய தந்தை சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதுடன், படுகாயமடைந்த 6 வயதுடைய மகளும் மகனும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளனர்.

இதனையடுத்து பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் பாதாள உலகக் கும்பலின் தலைவர் ஒருவரின் தலைமையில் இந்த துப்பாக்கிச் சூடு மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

மேலும் துப்பாக்கி தாரிகள் ரி-56 ரக துப்பாக்கியை பயன்படுத்தி துப்பாக்கிச் சூட்டை மேற்கொண்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்த தந்தை பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர் என்பதுடன், கைக்குண்டு மற்றும் ரிவோல்வர் ரக துப்பாக்கியைத் தன்வசம் வைத்திருந்தல் உள்ளிட்ட குற்றச்சாட்டுகளின் பேரில் இவருக்கு எதிராக நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# செல்பி எடுக்க முயன்ற ரஷ்யப் பெண் பதுளை ரயிலில் இருந்து விழுந்து பலி!

கொழும்பு, பெப். 20

பதுளையில் இருந்து கொழும்பு கோட்டை நோக்கி நேற்று காலை பயணித்த ரயிலில் இருந்து தவறி விழுந்த ரஷ்ய நாட்டுப் பிரஜையான பெர்மினோவா ஓல்கா என்ற 51 வயதுடைய பெண் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பதுளை ரயில் நிலையத்திலிருந்து சுமார் ஒரு கிலோமீற்றர் தொலைவில் உள்ள அமுனுவெல்பிட்டிய பகுதியில் உள்ள சுரங்க பாதையை கடந்து ஓடும் ரயிலில் செல்பி எடுத்துக்கொண்டிருந்த குறித்த பெண் ரயில் வீதி ஓரமாக இருந்த கற்களில் மோதி சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

சடலம் அதே ரயிலில் ஹாலிஎல ரயில் நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து பதுளை போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு பதுளை போதனா வைத்தியசாலையில் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹாலிஎல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

எல்லை தாண்டிய மீன்பிடி:

# 14 இந்திய மீனவர்களுக்கு தலா ரூ. 50,000 அபராதம்!

கிளிநொச்சி, பெப். 20

இலங்கை கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழைந்த 14 இந்திய மீனவர்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது. அத்துடன், ஒருவருக்கு 18 மாதங்கள் சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பளித்தது கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றம்.

இரணைதீவுக்கு அண்மையாக கடந்த 9ஆம் திகதி இரு படகுகளுடன் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த 14 இந்திய மீனவர்களுக்கே இந்தத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

நேற்றைய தினம் கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றில் இந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

இதன்போது, ஒரு இழுவைப் படகில் கைதான 11 பேருக்கு 10 வருடங்களுக்கு ஒத்திவைத்த 12 மாத சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. மற்றொரு குற்றச்சாட்டிலும் 10 வருடங்களுக்கு ஒத்திவைத்த 6 மாத சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டதுடன், தலா 50 ஆயிரம் ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டது. அத்துடன், அபராதத்தை செலுத்தத் தவறின் 6 மாத சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டது. படகு உரிமையாளருக்கு 60 இலட்சம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது.

இதேபோன்று மற்றைய படகில் கைது செய்யப்பட்ட 3 பேருக்கும் முதலாவது குற்றச்சாட்டுக்கு 10 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட பன்னிரெண்டு மாத சிறையும் இரண்டாவது குற்றச் சாட்டுக்கும் 10 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட ஆறு மாத சிறைத்தண்டனையும் தலா 50 ஆயிரம் ரூபாய் தண்டப்பணமும் அதனை செலுத்த தவறின் ஆறுமாத சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டது.

இவர்களில் ஒருவர் ஏற்கனவே யாழ். நீதிவான் நீதிமன்றத்தல் ஒத்திவைத்த சிறைத் தண்டனை விதிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டவர் என்பால் அவருக்கு 18 மாத சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. (ஐ)

## பாதுகாப்பு கோரும் அர்ச்சுனா எம்.பி.!

கொழும்பு, பெப். 20

புதுக்கடை நீதிமன்ற வளாகத்தில் நேற்று காலை நடந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தைத் தொடர்ந்து, யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா, பொது அமர்வுகளின் போது தனக்கு பாதுகாப்பு வழங்குமாறு கோரியுள்ளார்.

கடந்த சில வாரங்களாக யாழ்ப்பாணத்தில் பலரால் தான் அச்சுறுத்தப்பட்டதாக பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா பாராளுமன்றத்தில் சுட்டிக் காட்டினார்.

"இந்த அமர்வுகளுக்குப் பிறகு நாங்கள் யாழ்ப்பாணத்திற்குத் திரும்பிச் செல்ல திட்டமிட்டுள்ளோம்.

இந்த பிரச்னை நமது நாட்டில் மிகவும் முக்கியமானதாகி விட்டதால், குறைந்தபட்சம் பொது அமர்வுகளின் போது எங்களுக்கு பாதுகாப்பு வழங்குமாறு பொது பாதுகாப்பு அமைச்சரிடம் கேட்டுக்கொள்கிறேன்," என்று அவர் கூறினார்.

இந்நிலையில், குறித்த விவகாரம் சபாநாயகரிடம் பரிந்துரைக்கப்படும் என்று பிரதிச் சபாநாயகர் தெரிவித்துள்ளார்.

# இஸ்ரேலுக்கு 2,000 தாதியர்களை இவ்வருடம் அனுப்ப எதிர்பார்ப்பு!

கொழும்பு, பெப். 20

இந்த வருடம் நாட்டிலிருந்து இஸ்ரேலுக்கு 2,000 தாதியர்களை அனுப்புவதற்கு எதிர்பார்த்துள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

இதுவரையில் 148 தாதியர்கள் இஸ்ரேலுக்கு பணிக்காகச் சென்றுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, எதிர்வரும் 24 ஆம் திகதி தாதியர் பணிக்காகச் செல்லவுள்ள 17 தாதியர்களுக்கான விமான பயணச்சீட்டுகள் வழங்கப்பட்டுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

# பூஸா சிறைக்குள் விசேட சோதனை நடவடிக்கை

கொழும்பு, பெப். 20

பூஸா சிறைச்சாலையில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனை நடவடிக்கையில் கையடக்கத் தொலைபேசி உட்பட பல வேறு பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் தெரிவித்தனர்.

பொலிஸ் விசேட அதிரடிப்படையினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போதே இந்த பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதன்போது, சிறைச்சாலையில் மிகவும் சூட்சுமமான முறையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஒரு கையடக்கத் தொலைபேசி, ஒரு சிம் அட்டை, சார்ஜர் மற்றும் ஹெட்செட் உள்ளிட்ட பல வேறு பொருட்கள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
20.02.2025 வியாழக்கிழமை
பிலவ வருடம், மாசி 08

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## தேர்தலில் எவ்வாறு போட்டியிடுவது?

உள்ளூராட்சி தேர்தல் விரைவில் நடைபெறலாம் என்று எதிர்பார்க்கப்படும் நிலையில், இலங்கை தமிழ் அரசுக் கட்சியும் ஏனைய கட்சிகளும் எவ்வாறு போட்டியிடுவது என்று தங்களின் அபிப்பிராயங்களை வெளியிட்டு வருகின்றன. இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பதில் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் இது தொடர்பில் கருத்துகளை வெளியிட்டிருக்கின்றார். முதலில் இது தொடர்பில் பொதுவெளியில் பேச வேண்டிய அவசியமில்லை. ஒரு விடயத்தில் தெளிவான நிலைப்பாடு இருந்தால் அதனை செயலில் காண்பிக்க வேண்டுமே தவிர, அதனையும் ஓர் அரசியலாக்க வேண்டியதில்லை.

உள்ளூராட்சித் தேர்தலில் தனித்துப் போட்டியிட வேண்டும் - அதுதான் இலங்கை தமிழ் அரசுக் கட்சிக்கு சரியானது என்னும் அடிப்படையில்தான் அந்தக் கட்சி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து வெளியேறும் முடிவை எடுத்திருந்தது. இந்தப் பின்புலத்தில்தான் அதுவரையில் சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிகளாக இருந்த ஏனைய கட்சிகள் தனித்துப் போட்டியிட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டன.

இலக்க அடிப்படையில் ஐந்து கட்சிகள் தேவையென்னும் அடிப்படையில் இன்னும் சிலரையும் இணைத்துக் கொண்டு தங்களை ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியாக தேர்தலில் முன்னிறுத்தியிருந்தன. இலங்கை தமிழ் அரசுக் கட்சி தனித்துச் செல்லும் முடிவை எடுக்காதிருந்திருந்தால் செல்வம் அடைக்கலநாதன் தலைமையிலான ரெலோ மற்றும் த.சித்தார்த்தன் தலைமையிலான டி பி.எல்.எவ் (புளொட்) ஆகிய கூட்டமைப்பின் பங்காளிகள் ஒருபோதும் தனித்துச் செல்லும் முடிவை எடுத்திருக்கமாட்டார்கள்.

இந்தப் பின்புலத்தில் விடயங்களை நோக்கினால், முன்னர் ஓர் உள்ளூராட்சி தேர்தலை முன்வைத்து உடைவுற்ற அல்லது சிதறிப்போன கூட்டமைப்பை - இன்னோர் உள்ளூராட்சி தேர்தலை முன்வைத்து ஒட்டவைக்க முடியுமா? முயன்றால் இது முடியாத விடயமல்ல. ஆனால், இலங்கை தமிழ் அரசு கட்சி கடந்த பாராளுமன்றத் தேர்தலில் 8 ஆசனங்களைப் பெற்று பிரதான கட்சியாகத் தங்களை முன்னிறுத்திக் கொண்டது. எதிரணியாக போட்டியிட்ட ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி - ஐந்து கட்சிகளின் கூட்டாகத் தங்களைக் காண்பித்தபோதிலும்கூட, ஓர் ஆசனத்தையே பெற முடிந்தது. இந்த நிலையில் ஒரு தேர்தல் கூட்டாக சம அந்தஸ்தோடு இணைந்து செயல்படுவது எவ்வாறு சாத்தியப்பட முடியும்? அதுவும் முயன்றால் முடியும். ஆனால், இலங்கை தமிழ் அரசு கட்சி தங்களுடைய உறுப்பினர்களுக்கு ஒதுக்க வேண்டிய ஆசனங்களை - தோல்வியடைந்த ஏனைய கட்சிகளுக்கு வழங்குவதற்கு முன்வருமா?

இந்தக் கேள்விகளிலிருந்துதான் உள்ளூராட்சி தேர்தலை அனைவருமாக இணைந்து எதிர்கொள்வதிலுள்ள நடைமுறைச் சிக்கல்களை நோக்கவேண்டும். ஏனெனில், தமிழ்த் தேசியத்தை அவ்வப்போது உச்சரித்துக் கொண்டாலும் தேர்தல் நலன்களின் அடிப்படையில்தான் அனைத்துக் கட்சிகளுமே சிந்திப்பதுண்டு. இந்த நிலையில் மக்களை கருத்தில் கொண்டு தமிழ் கட்சிகள் சிந்தித்ததாக கடந்த பதினைந்து வருடங்களில் சான்றில்லை. ஆனால், இன்றைய சூழலில் தமிழர் அரசியலை ஒப்பீட்டிப்படையில் - மிகவும் பலவீனமான நிலையிலாவது ஒரு ஜனநாயக வலுவாக காண்பிக்க வேண்டுமென்றால் - வடக்கு, கிழக்கிலுள்ள தமிழ்க் கட்சிகள் ஓர் ஐக்கிய முன்னணியாகத் தேர்தல்களை எதிர்கொண்டால் மட்டுமே அது சாத்தியப்படும்.

## மருத்துவமனை வீதி தரிப்பிடமானதால் மக்கள், நோயாளர்கள் பெரும் சிரமம்!

வடமராட்சி, பெப். 20

பருத்தித்துறை ஆதார மருத்துவமனை வீதியில் இரு புறமும் வாகனங்களை நிறுத்துவதாலும் கனரக வாகனங்கள் பயணிப்பதாலும் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ளது. அத்துடன், அடிக்கடி விபத்துகளும் ஏற்படுகின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது.

பருத்தித்துறை - யாழ்ப்பாணம் பிரதான வீதி சந்தி தொடக்கம் பருத்தித்துறை - சாவகச்சேரி, மந்திகை, வல்லிபுரம் நாற்சந்தியை இணைக்கும் மந்திகை நாற்சந்தி வரையிலான வீதியில் இரு மருங்கிலும் வாடகை ஓட்டோக்கள், மோட்டார் சைக்கிள்கள், சைக்கிள்கள் தரித்து நிற்கின்றன.

அதே வேளை பாரவூர்தி போன்ற வாகனங்கள் மற்றும் கனரகங்களும் இவ் வீதியை பயன்படுத்தி வருகின்றன.

வைத்தியசாலை வீதி கனரக வாகனங்கள் செல்வதற்கு தடை விதிக்கப்பட்டது. அதற்கான அறிவிப்பு பலகைகள் தற்போது காணாமல் போயுள்ள நிலையில் கனரக வாகனங்களும் அந்த வீதியால் பயணித்து வருகின்றன.

இந்த நிலையில், அகலம் குறைந்த வீதியில் இருபுறமும் வாகனங்கள் தரித்து நிற்பதாலும் ஒடுங்கிய பாதையிலேயே வாகனங்கள் பயணிக்க வேண்டிய நிலையுள்ளது. இதனால், மருத்துவமனைக்கு வரும் நோயாளர்கள் மற்றும் அந்த வீதியால் பயணிப்பவர்கள் வாகன நெரிசலுக்கு உள்ளாவதுடன், விபத்துகளையும் சந்திக்க நேரிடுகிறது.

இது விடயத்தில் பொலிஸாரும் அசமந்தப் போக்கில் செயல்படுகின்றனர்.

இந்த நிலையில், இந்த வீதியில் நெருக்கடிகளை குறைக்க உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(ஐ-02)

## பருத்தித்துறையில் வார இறுதி நாட்களில் வீதியோர வியாபாரம்!

வடமராட்சி, பெப். 20

பருத்தித்துறை பிரதேச சபை எல்லைக்குள் வீதியோர வியாபாரத்துக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. எனினும், சனி, ஞாயிறு விடுமுறை தினங்களில் வீதியோர நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது.

பருத்தித்துறை பிரதேச சபை எல்லைக்குள் பருத்தித்துறை - யாழ்ப்பாணம் வீதியில் கிராமக்கோடு தொடக்கம் சாரையடி, மந்திகை, சிலையடி, பழைய தெருமூடி மடம் வரையான இடங்களில் வீதியோர வியாபாரம் நடைபெற்று வந்தது.

இதனால், ஏற்பட்ட போக்குவரத்து நெருக்கடிகளை அடுத்து வீதியோர வியாபாரத்துக்கு தடை விதிக்கப்பட்டது.

மீறி வியாபாரத்தில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கையும் எடுக்கப்பட்டது. இதனால், வீதியோர வியாபாரம் கட்டுப்பாட்டுக்குள் இருந்த நிலையில், தற்போது மீண்டும் வீதியோர வியாபார நடவடிக்கைகள் முளைத்துள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது.

(ஐ-02)

## இளவாலையில் புத்தக அரங்க விழா

யாழ்ப்பாணம், பெப். 20

தேசிய கலை இலக்கியப் பேரவையின் 50 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு 'நூறு மலர்கள் மலரட்டும்' என்ற தொனிப் பொருளில் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வரும் புத்தக அரங்க விழாவின் 23ஆவது நிகழ்வு எதிர்வரும் சனி, ஞாயிறு தினங்களில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியில் நடைபெறவுள்ளது


சனிக்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகும் முதல் நிகழ்வில் ஈழத்து நூல்களை அறிவோம் என்ற தொனிப்பொருளில் நூல்களின் அறிமுகமும் கலந்துரையாடலும் அண்ணாவியார் இராசையா மார்ட்டின் நினைவு அரங்கில் இளவாலை திருமறை கலா மன்றத்தின் நிகழ்ச்சித் திட்ட இணைப்பாளர் எஸ் றொபின்சன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் நூல்களின் அறிமுக உரைகளை பண்டைநகர் நாயகன் எ.இ.பீரிஸின் 'இரகசியங்கள்' சிறுகதைத் தொகுதி தொடர்பாக ஆசிரியர் விஜித் விமல்ராஜ் சுசில்டாம், வசீகரனின் 'நோவிலும் வாழ்வு' கவிதை தொகுதி தொடர்பாக அனற்ஜெனா ஜெறாட், நிலவனின் 'அபிரால் ஆகிய நானும் ஆதிரா என்றொரு அவளும்...' சிறுகதைத் தொகுப்பு பற்றி கவிஞர் வட்டக்கச்சி விநோத், தோழர் கே. ஏ. சுப்பிரமணியத்தின் "தாயகம் ஆசிரியர் தலையங்கங்கள்" நூல் தொடர்பாக கல்வியியற் கல்லூரி ஓய்வுநிலை விரிவுரையாளர் கலாநிதி ந.இரவீந்திரன் ஆகியோர் ஆற்றவுள்ளனர்.

மாலை 5 மணியளவில் கூத்தாட்டு அவைக்களத்தின் தயாரிப்பில், வி. விஜயரூபனின் எழுத்துரு, நெறியாள்கையில் 'பட்டறிவு' மற்றும் செம்முகம் ஆற்றுகை குழுவினரின் தயாரிப்பில் சீலனின் எழுத்துரு, நெறியாள்கையில் "எங்கே எங்கே குடை எங்கே?" ஆகிய சிறுவர் நாடகங்களும் அரங்கேறவுள்ளன.

(ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெப்ரவரி -20 வியாழக்கிழமை
குரோதி வருடம் - மாசி 08
நல்ல நேரம்:10.30-12.00
ராகு காலம்:1.30 -3.00
திதி :அஷ்டமி



## இன்றைய ராசிபலன்

**மேடம்**
சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள். பிள்ளைகள் பொறுப்பாக நடந்து கொள்வார்கள். கல்யாண பேச்சு வார்த்தை சாதகமாக முடியும். திறமைகள் வெளிப்படும் நாள்.

**இடபம்**
பணப்புழக்கம் அதிகரிக்கும். உறவினர், நண்பர்களின் வருகையால் வீட்டில் உற்சாகம் பொங்கும். அரசால் அனுகூலம் உண்டு. வழக்கில் சாதகமான தீர்ப்பு வரும். திடீர் யோகம் கிட்டும் நாள்.

**மிதுனம்**
குடும்ப வருமானத்தை உயர்த்த முற்படுவீர்கள். நீண்ட நாள்பிரார்த்தனையை நிறைவேற்று வீர்கள். நட்பால் ஆதாயம் உண்டு. உறவினர்களின் அன்புத் தொல்லை குறையும். கனவு நனவாகும் நாள்.

**கடகம்**
பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். பணப்பற்றாக்குறையை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள். தாயாருடன் வீண் விவாதம் வந்து போகும். கலைப் பொருட்கள் வாங்குவீர்கள்.

**சிம்மம்**
சவால்கள் விவாதங்களில் வெற்றி பெறுவீர்கள். உடன்பிறந்தவர்கள் பாசமழை பொழிவார்கள். அரசால் ஆதாயம் உண்டு. அதிகாரப்பதவியில் இருப்பவர்கள் உதவுவார்கள். தைரியம் கூடும் நாள்.

**கன்னி**
இதுவரை இருந்த சோர்வு நீங்கி துடிப்புடன் செயல்படத் தொடங்குவீர்கள். குடும்பத்தில் இருந்து வந்த கூச்சல், குழப்பம் நீங்கும். மகிழ்ச்சி அதிகரிக்கும். அரைகுறையாக இருந்த வேலைகள் முடியும்.

**துலாம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் ஒரே நேரத்தில் இரண்டு மூன்றுவேலைகளை இழுத்துப் போட்டுப்பார்க்க வேண்டி வரும். வியாபாரத்தில் ரகசியங்களை வெளியிட வேண்டாம்.

**விருட்சிகம்**
விடாப்பிடியாக செயல்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். உறவினர்களுடன் மனஸ்தாபங்கள் வந்து நீங்கும். வாகனம் தொந்தரவு தரும். அரசு காரியங்கள் தாமதமாக முடியும்.

**தனுசு**
எதையும் சமாளிக்கும் சாமர்த்தியம் பிறக்கும். பெற்றோருடன் மனம் விட்டு பேசுவீர்கள். பொதுக் காரியங்களில் ஈடுபடுவீர்கள். வெளிவட்டாரத்தில் புது அனுபவம் உண்டாகும். மதிப்புக் கூடும் நாள்.

**மகரம்**
கோபத்தை கட்டுப்படுத்தி உயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள். சிலர் உங்களை நம்பி முக்கிய பொறுப்புகளை ஒப்படைப்பார்கள். உறவினர், நண்பர்களால் ஆதாயமுண்டு.

**கும்பம்**
கடந்த இரண்டு நாட்களாக கணவன்-மனைவிக்குள் இருந்த மோதல்கள் விலகும். ஆடை ஆபரணம் சேரும். உறவினர்கள் மதிப்பார்கள். பணவரவு திருப்தி தரும்.

**மீனம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் செலவுகளை குறைக்க முடியாமல் திணறுவீர்கள். அவசரப்பட்டு அடுத்தவர்களை விமர்சிக்க வேண்டாம். நயமாகப் பேசுபவர்களை நம்பாதீர்கள். பொறுமை தேவைப்படும் நாள்.

# ஆசிரியர் கலாசாலையில் தாய்மொழி தின நிகழ்வு!

யாழ்ப்பாணம், பெப். 20

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை நடத்திய உலக தாய்மொழி தின நிகழ்வு நேற்று புதன்கிழமை காலை ரதிலக்ஷ்மி மண்டபத்தில் அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வுகளை கிறிஸ்தவ நெறி ஆசிரிய மாணவி கமலினி சுதாகர் நெறிப்படுத்தினார்.

யாழ்ப்பாண பல்கலைக்கழக கல்வியியல் துறை தலைவர் கலாநிதி. ஆ. நித்திலவர்ணன் பங்குகொண்டதோடு ஆசியுரையையும் வழங்கினார்.

யாழ்ப்பாண பல்கலைக்கழக கல்வி முதுமாணி கற்கைநெறி ஆசிரியர் திருமதி. மதுரா முகுந்தன் தாய்மொழியைப் பேணுவோம் என்ற தலைப்பில் உரை நிகழ்த்தினார்.

உடற்கல்வி நெறி ஆசிரிய மாணவி உஷாநந்தினி விமல்ராஜ் கவிதை வழங்கினார்.

கலாசாலை விரிவுரையாளர் வேலும் மயிலும் சேந்தன் தமிழ் மரபுரிமை ஆய்வுகளும் , அதன் சமகால போக்குகளும் என்ற தலைப்பில் உரையாற்றினார். கலாசாலை அதிபரின் நிறையுரையுடன் நிகழ்வுகள் நிறைவு பெற்றன. (ஐ)

## குருதி தான முகாம்

யாழ்ப்பாணம், பெப். 20

பவ்ரலின் தேர்தல் கண்காணிப்பு செயல்பாட்டாளரான சிறீதரன் சபாநாயகத்தின் 3ஆம் மாத நினைவுதினத்தை முன்னிட்டு இரத்த தான முகாமும் உள்ளூராட்சி தேர்தல் சட்டம் தொடர்பான கலந்துரையாடலும் நடைபெறவுள்ளன.

நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9 மணி முதல் அரியாலையிலுள்ள சர்வோதய அமைப்பின் தலைமையத்தில் இந்த முகாம்கள் நடைபெறவுள்ளன.

முன்னாள் தேர்தல்கள் ஆணையாளர் முகமட்டும் பங்கேற்கும் இந்த நிகழ்வில் உள்ளூராட்சி தேர்தல் சட்டங் கள் தொடர்பான கலந்துரையா டலும் நடைபெறவுள்ளது. (ஐ)

# முத்துஐயன்கட்டு குளத்தின் கீழ் இம்முறை 4,564 ஏக்கரில் சிறுபோகம்!

முல்லைத்தீவு, பெப். 20

முத்துஐயன்கட்டு குளத்தின் கீழ் 4564.5 ஏக்கரில் சிறுபோக பயிர்ச் செய்கையை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் மிகப்பெரிய நீர்ப்பாசன குளமான முத்துஐயன்கட்டு குளத்தின் 2025ஆம் ஆண்டுக்கான சிறுபோக செய்கை தொடர்பான கூட்டம் நேற்று முன்தினம் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் உமாமகேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.


முத்துஐயன்கட்டு நீர்ப்பாசன பொறியியலாளர் பணிமனையில் நடைபெற்ற இந்த கலந்துரையாடலில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் முல்லைத்தீவு மாவட்டத்தில் நீர்ப்பாசன பொறியியலாளர் உட்பட சம்பந்தப்பட்ட திணைக்களங்களின் தலைவர்கள், கிராம அலுவலர்கள், கமக்கார அமைப்பின் பிரதிநிதிகள், பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

இதன்போது, முத்துஐயன்கட்டு குளத்தின் கீழ் 4564.5 ஏக்கர் நிலப்பரப்பு சிறுபோக செய்கைக்காக தீர்மானிக்கப்பட்ட நிலையில் 3686.5 ஏக்கர் விவசாய நிலத்தில் நெற்செய்கையும் 878 ஏக்கர் விவசாய நிலத்தில் ஏனைய உணவுப் பயிர்ச்செய்கையும் மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த சிறுபோக செய்கைக்கான வாய்க்கால் துப்பரவு, நீர் வழங்கல், கால்நடை கட்டுப்பாடு, நன்னீர் மீன்பிடி முதலான பல்வேறு விடயங்கள் இதன்போது ஆராயப்பட்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. (ஐ)

# மன்னார் இரணைஇலுப்பைக்குளம் பாடசாலை தரம் உயர்த்தப்பட்டது

## வட மாகாண ஆளுநர் பங்கேற்பு



மன்னார், பெப். 20

மன்னார் இரணை இலுப்பைக்குளம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை தரம் 1சி பாடசாலையாக நேற்றைய தினம் தரம் உயர்த்தப்பட்டது.

இந்தப் பாடசாலையில் இதுவரை காலமும் சாதாரண தரம் வரையான வகுப்புகளே நடத்தப்பட்டன. இதையடுத்து, உயர்தர வகுப்புகளும் நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டன.

இந்தப் பாடசாலையை தரமுயர்த்துமாறு இந்தப் பிரதேசத்தினர், பாடசாலை சமூகத்தினர் பல கோரிக்கைகளை விடுத்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

பாடசாலை தரம் உயர்த்தப்பட்ட நிகழ்வில் வட மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் மடு கல்வி வலய பணிப்பாளர், மடு பிரதேச செயலாளர் உட்பட பலர் பங்கேற்றனர். (ஐ)

# கடலாமை இறைச்சியுடன் குருநகரில் ஒருவர் கைது!

யாழ்ப்பாணம், பெப். 20

30 கிலோ எடையுள்ள உயிர் கடலாமையுடனும் 20 கிலோ கடலாமை இறைச்சியுடனும் குருநகரை சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குருநகர் இறால் வளர்ப்பு திட்டம் பகுதியில் வைத்து 57 வயதான சந்தேகநபரை யாழ். மாவட்ட பொலிஸ் புலனாய்வு பிரிவினர் கைது செய்தனர்.

சந்தேகநபர் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். விசாரணைகளின் பின்னர் அவரை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர். (ஐ-05)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சி.ஐ.டியிலிருந்து தப்பிச்செல்ல முயன்ற

# ஹரக் கட்டாவுக்கு உதவிய நால்வர் இந்தியாவில் கைது!

கொழும்பு, பெப். 20

**திட்டமிடப்பட்ட குற்றச் செயல்களில் ஈடுபடும் குழுவின் உறுப்பினரான ஹரக் கட்டா என்ற நதுன் சிந்தக்க, குற்றப்புலனாய்வு திணைக்களத்திலிருந்து தப்பிச்செல்ல முயற்சித்தமைக்கு உதவி வழங்கிய ரவீந்ர சந்தீப குணசேகர என்ற பொலிஸ் கான்டஸ்பிள் உள்ளிட்ட நால்வர் இந்தியாவில் கைது செய்யப்பட்டுள்ளனர்.**

குற்றப்புலனாய்வு திணைக்களத்தினரால் தடுத்து வைக்கப்பட்டிருந்த ஹரக் கட்டா விசாரணை ஒன்றின்போது 2023ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 10ஆம் திகதி தப்பிச் செல்ல முற்பட்டார்.

அவரது முயற்சி தடுக்கப்பட்டு கைது செய்யப்பட்ட போதிலும் அவருக்கு உதவி வழங்கிய பொலிஸ் கான்ஸ்டபிள் நாட்டிலிருந்து தப்பிச் சென்றிருந்தார். இந்த நிலையில் குறித்த பொலிஸ் கான்ஸ்டபிள் உள்ளிட்ட நால்வர் இந்தியாவில் கைது செய்யப்பட்டுள்ளனர். (அ)

## தேசிய பாதுகாப்பைப் பலப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்!

### தயாசிறி ஜயசேகர கோரிக்கை

கொழும்பு, பெப். 20

அரசாங்கம் தேசிய பாதுகாப்பை பலப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர வலியுறுத்தியுள்ளார்.

கொழும்பு புதுக்கடை நீதிமன்ற வளாகத்தில் நேற்று மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் தொடர்பாக பாராளுமன்றில் கருத்துத் தெரிவித்த போதே தயாசிறி ஜயசேகர இதனை கூறினார்.

இதன்போது " சட்டத்தரணி போன்று ஆடை அணிந்து வந்த ஒருவரே குறித்த துப்பாக்கிச் சூட்டை நடத்தியுள்ளார் எனவும் நீதிமன்றத்துக்குள்ளேயே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது எனவும், இச்சம்பவம் நீதிபதிகளுக்கும் சட்டத்தரணிகளுக்கும் பாதுகாப்பு இல்லாத நிலைமையே காட்டுகின்றது எனவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் இது சிறிய விடயம் அல்ல எனவும், இது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தாமல் விட்டால் பாரிய விளைவைச் சந்திக்க நேரிடும் என்றும் தயாசிறி ஜயசேகர கூறினார். (அ)

## ஆடை தொழிற்சாலையில் தீ!

கொழும்பு, பெப். 20

ஆடை தொழிற்சாலை ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்து காரணமாக குறித்த தொழிற்சாலை முற்றிலும் எரிந்து நாசமாகியுள்ளது.

தெஹிவளை, திவுல்பிட்டிய, பிபிலியானையில் அமைந்துள்ள மூன்று மாடி ஆடை உற்பத்தி தொழிற்சாலையில் நேற்று முன்தினம் இரவு ஏற்பட்ட தீ விபத்து காரணமாக, முழு கட்டிடமும் முற்றிலுமாக எரிந்து நாசமாகியுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பாக தெஹிவளை கல்கிசை நகராட்சி மன்றம் அதிகாரபூர்வ தகவல்களை வெளியிட்டுள்ளது.

இரவு 11.30 மணியளவில் தொடங்கிய தீ, தொழிற்சாலையின் பின்புறத்தில் உருவாகி, முன் மற்றும் மேல் தளங்களுக்கும் வேகமாக பரவியது. அப்போது தொழிற்சாலையில் யாரும் இல்லை என்பதால் மனித உயிரிழப்புகள் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. ஆனால், அருகில் அமைந்திருந்த சோலர் மின் சாதனக் கடை மற்றும் அதன் பொருட்கள் முற்றிலும் தீக்கிரையாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தீயணைப்பு வீரர்கள் தீ விபத்து ஏற்பட்ட நேரத்தில் தொழிற்சாலைக்குள் நுழைய முடியாததால் தீ விரைவாக பரவியது.

தீயை கட்டுப்படுத்துவதற்காக கொழும்பு, கோட்டை, மொறட்டுவ மற்றும் தெஹிவளை பகுதிகளிலிருந்து பல தீயணைப்பு வாகனங்கள் சம்பவ இடத்துக்கு விரைந்தன. தீ பரவுவதை கட்டுப்படுத்துவதற்காக அவர்கள் அதிகாலை 5 மணி வரை கடுமையாக போராடினர்.

குறித்த பாரிய தீ விபத்து ஏற்பட்டதற்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை.இச் சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை அதிகாரிகள் முன்னெடுத்து வருகின்றனர். (அ)

# நாடளாவிய ரீதியில் நிலவிவரும் ஆசிரிய வெற்றிடம் நிரப்பப்படும்

### பிரதமர் ஹரிணி உறுதி

கொழும்பு, பெப். 20

நாடளாவிய ரீதியில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு இந்த வருடத்திற்குள் நடவடிக்கை எடுக்கப்படும் என கல்வி உயர்கல்வி அமைச்சரான பிரதமர் கலாநிதி ஹரினி அமரசூரிய பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அத்துடன், ஆசிரியர் கலாசாலைகளில் இருந்து வெளியேறும் ஆசிரியர்களுக்கும் இந்த வருடத்திற்குள் நியமனங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

அந்த வகையில் இந்த வருடத்துக்குள் பெரும்பாலான ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்ப முடியும் என்றும் அவர் சபையில் நம்பிக்கை வெளியிட்டார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன் தினம் வாய்மூல விடைக்கான வினாக்கள் வேளையில் சாமர சம்பத் தசநாயக்க எம்பி எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கும் போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.

சாமர சம்பத் தசநாயக்க எம். பி தமது கேள்வியின் போது, "மாகாண சபை பாடசாலைகளிலிருந்து தேசிய பாடசாலைகளுக்கு ஆசிரியர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டு வந்தார்கள். எனினும் அதற்கான கால எல்லையை மீண்டும் நீடிக்காமல் இருப்பதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்பதை கல்வி அமைச்சர் அறிவாரா?" என கேள்வி எழுப்பினார்.

அதற்கு பதிலளித்த பிரதமர், "தேசிய பாடசாலைகளிலிருந்து மேலதிகமாக காணப்படும் ஆசிரியர்களை மாகாண பாடசாலைகளுக்கும் மாகாண பாடசாலைகளில் மேலதிகமாக காணப்படும் ஆசிரியர்களை தேசிய பாடசாலைகளுக்கு நியமிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

எனினும் நீதிமன்றத்தில் அது தொடர்பான வழக்கு ஒன்று தாக்கல் செய்யப்பட்ட நிலையில் அது நிறுத்தப்பட்டிருந்தது.

எனினும், பின்னர் கிடைத்த நீதிமன்ற தீர்ப்பையடுத்து மீண்டும் அதற்கான வாய்ப்பு கிடைத்துள்ளது.

அந்தவகையில் இந்த வருட இறுதிக்குள் ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்" என்றும் அவர் தெரிவித்தார். (அ)

## உணவுவகைகளின் விலையை திடீரென அதிகரிப்போர் மீது சட்ட நடவடிக்கை!

கொழும்பு, பெப். 20

உணவு வகைகளின் விலையை திடீரென அதிகரிக்குமாறு கோருகின்ற சங்கங்களின் சட்டத் தன்மை தொடர்பில் ஆராயப்படும் என நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.

தற்போது பொருட்களின் விலை குறைவடைந்துள்ளதாகவும் திடீரென உணவுப் பொருட்களின் விலையை அதிகரிக்க முடியாது எனவும் நுகர்வோர் விவகார அதிகார சபையின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை, இந்த முறை அரசாங்கம் சமர்ப்பித்துள்ள பாதீட்டில் உணவகங்கள் மற்றும் சிற்றுண்டிச்சாலைகளுக்கு நிவாரணம் வழங்கப்படாமையினால் தேநீர், பால் தேநீர் உள்ளிட்டவற்றின் விலையை அதிகரிப்பதாக அகில இலங்கை உணவக மற்றும் சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கம் அறிவித்துள்ளது.

நேற்று நள்ளிரவு முதல் அமுலாகும் வகையில் குறித்த உணவு வகைகளின் விலையை அதிகரிப்பதாக அந்த சங்கத்தின் தலைவர் ஹர்ஷன ருக்ஷான் தெரிவித்தார். (அ)

## ரயில் மோதி முதியவர் பலி!

கொழும்பு, பெப். 20

ரயிலில் மோதி முதியவர் உயிரிழந்த சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளது.

கொழும்பிலிருந்து அனுராதபுரம் நோக்கி பயணித்த ரயில், தம்புத்தேகம மற்றும் செனரத்கம ரயில் நிலையங்களுக்கு இடையில் சென்றுக்கொண்டிருந்த போது, ரயில் மோதி சுமார் 65 வயது மதிக்கத்தக்க நபர் உயிரிழந்துள்ளார்.

நேற்று அதிகாலை இடம்பெற்ற இந்த விபத்தில், மோதி பலத்த காயமடைந்த அந்த நபர், உடனடியாக தம்புத்தேகம வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

எனினும், அவருக்கு வழங்கப்பட்ட சிகிச்சைகள் பலனின்றி அவர் உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த நபரின் முழு விவரங்கள் இன்னும் உறுதிப்படுத்தப்படவில்லை. இது குறித்த மேலதிக விசாரணைகளை தம்புத்தேகம பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (அ)

## சட்டவிரோத மாணிக்கக் கல் அகழ்வில் ஈடுபட்ட 4 பேர் கைது

கொழும்பு, பெப். 20

மஸ்கெலியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரவுன்ஸ்விக் தோட்டத்தில் சட்டவிரோதமாக மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்ட சந்தேகத்தின் பேரில் நான்கு பேர் கைது செய்யப்பட்டதாக மஸ்கெலியா பொலிஸார் தெரிவித்தனர்.

மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்டதாக கிடைத்த தகவலின் அடிப்படையில் மஸ்கெலியா பொலிஸார் இந்த சுற்றிவளைப்பை மேற்கொண்டதாகவும், சந்தேக நபர்களையும் மாணிக்கக்கல் அகழ்விற்குப் பயன்படுத்தப்பட்ட உபகரணங்களையும் பொலிஸார் கைப்பற்றியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் 25, 36, 37 மற்றும் 40 வயதுடைய மஸ்கெலியா பிரதேசத்தைச் சேர்ந்தவர்களாவர்.

மஸ்கெலியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (அ)

# கட்சிக் கொள்கை காரணமாகவே ஹர்ஷவுக்கு பதவி வழங்கவில்லை

### ஐக்கிய மக்கள் சக்தி கூறுகிறது

கொழும்பு, பெப். 20

கட்சியின் கொள்கை காரணமாகவே பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வாவுக்கு கட்சியின் கொழும்பு தலைமைத்துவம் வழங்கப்படவில்லை என்று ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். மரிக்கார் தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட பாராளுமன்ற உறுப்பினர் மரிக்கார் இதற்கு முன்னர் அவர் இதேபோன்று பதவியை இழந்ததாகவும், அதன் பிறகு கட்சித் தலைவர் அந்தப் பதவியை ஏற்றுக் கொண்டதாகவும் கூறினார்.

"நான் வாக்குகளைப் பெற்று இரண்டாவது இடத்தில் இருந்தபோதிலும், பிரச்னையை ஏற்படுத்தக்கூடும் என்பதால் என்னை நியமிக்க வேண்டாம் என்று பரிந்துரைகள் செய்யப்பட்டன. பின்னர் கட்சித் தலைவர் அந்தப் பதவியை ஏற்க அறிவுறுத்தப்பட்டது," என்று அவர் விளக்கினார்.இந்த முறை ஹர்ஷ டி சில் வாவின் நியமனம் தொடர்பாக வும் இதேபோன்ற ஒரு சம்பவம் நடந்ததாகக் கூறிய மரிக்கார், கட்சித் தலைவர் தொடர்ந்து அந்தப் பதவியில் நீடிக்க விரும் புவதாகத் தெரிகிறது என்றார்.

"அரசியலில், நாம் பொறுமையாக இருக்க வேண்டும், சில சம்பவங்களைத் தாங்கிக் கொள்ள வேண்டும். நாம் விரும்புவது எப்போதும் கிடைக்காது.

நாம் பாராளு மன்ற உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டாலும், அவையில் உரையாற்றுவதற் கான வாய்ப்பைப் பெற போராட வேண்டிய நேரங்கள் உள்ளன. இவை பொதுவான நிகழ்வுகள்," என்று கூறினார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்கத்துக்கு ஏற்றாற்போல் அரசியல் செய்யத் தயாரில்லை!

## நாமல் ராஜபக்ஷ கூறுகிறார்

கொழும்பு, பெப். 20

நாட்டின் நீதித்துறை கட்டமைப்பு சுயாதீனமாக இயங்கும் என நாம் நம்புகிறோம். அதனை அரசாங்கம் உறுதி செய்யவேண்டும். எனினும் அரசாங்கத்துக்கு ஏற்றாற் போல அரசியல் செய்ய நாம் தயாரில்லை என பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

வழக்கு விசாரணைக்காக கொழும்பு மேல் நீதிமன்றத் துக்கு சென்ற அவர் ஊடகங்க ளுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்-நல்லாட்சி அரசாங்கத்தின் காலப்பகுதியில் நிதி குற்ற விசாரணை பிரிவினால் எமக்கு எதிராக வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன.

எனினும் நாட்டின் நீதித்துறைக் கட்ட மைப்பு சுயாதீனமாக இயங்கு வதாக நாம் நம்புகிறோம்.

எனவே நீதித்துறையின் சுயாதீன தன்மையை அரசாங் கம் பாதுகாக்க வேண்டும். வழக்கு விசாரணைகளின்போது எமது நேர்மைத் தன்மையை நாம் நீதிமன்றத்தில் நிரூபிப் போம்.

அரசாங்கத்துக்கு ஏற்றாற் போல அரசியல் செய்ய நாம் தயாரில்லை. எமக்கு என்று ஒரு கொள்கை உள்ளது.எமது பிணைப்பு மக்களுடனேயே உள்ளது-என்றார். (அ)

# 22 வயது இளைஞன் குத்திக் கொலை!

## கொட்டாஞ்சேனையில் பயங்கரம்

கொழும்பு, பெப். 20

கொட்டாஞ்சேனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட புளூமெண் டல் ரயில் மார்க்க பகுதியில் நேற்று முன் தினம் செவ்வாய்க் கிழமை கூரிய ஆயுதங்கங்க ளால் தாக்கி நபரொருவர் கொலை செய்யப்பட்டுள்ளார்..

உயிரிழந்தவர் மட்டக்குளி பகுதியைச் சேர்ந்த 22 வயது டையவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த நபர் தனது மனைவியுடன் புளூமெண்டல் ரயில் மார்க்கத்துக்கு அருகில் வந்தபோது, சம்பவ இடத்தில் இருந்த மற்றொரு நபர் அவரை வேறொரு இடத்துக்கு அழைத் துள்ளார்.

இதன்போது, மோட்டார் சைக்கிள்களில் வந்த குழுவினர் கூர்மையான ஆயுதங்களால் தாக்கிக் கொலை செய்துவிட்டு தப்பிச் சென்றுள்ளதாக பொலி ஸார் மேற்கொண்ட விசார ணையில் தெரியவந்துள்ளது.

குறித்த கொலைச் சம்பவத் திற்கான காரணம் மற்றும் கொலையாளிகள் தொடர்பில் எவ்வித தகவலும் கிடைக்கப் பெறாத நிலையில், கொட் டாஞ்சேனை பொலிஸார் மேல திக விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். (அ)

# வெப்பமான வானிலை மே வரை தொடரக்கூடும்

கொழும்பு, பெப். 20

கடந்த சில நாட்களாக பல மாவட்டங்களை பாதித்துள்ள வெப்பமான வானிலை மே மாதம் வரை தொடரக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் கணித்துள்ளது.

இந்த நிலைமை காரணமாக நீர் நிலைகளில் நீர் மட்டம் குறைந்து வருவதால் குடிதண் ணீர் விநியோகம் மட்டுப்படுத் தப்படலாம் எனவும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகால மைப்புச் சபை தெரிவித் துள்ளது.

கடந்த 24 மணி நேரத்தில் இரத்தினபுரியில் அதிகபட்ச மாக 36.6 செல்சியஸ் வெப்ப நிலை பதிவாகியுள்ளது.

வடக்கு, வடமத்திய, வட மேல், மேல், தென் மாகாணங் களிலும் மொனராகலை மற் றும் இரத்தினபுரி மாவட்டங் களிலும் வெப்பநிலை அதிக மாக இருக்கலாம் என வளிமண் டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (அ)

# மருத்துவர் பணிப்புறக்கணிப்பு தற்காலிகமாக இடைநிறுத்தம்

கொழும்பு, பெப். 20

வருடாந்த இடமாற்றப் பிரச் சினையை அடிப்படையாகக் கொண்டு நிறைவுகாண் மருத் துவ தொழில் வல்லுநர் ஒன்றி யத்தினால் மேல் மாகாணச பைக்கு உட்பட்ட அனைத்து வைத்தியசாலைகளிலும் நேற்று முன்னெடுப்பதற்குத் திட்ட மிடப் பட்டிருந்த பணிப்புறக் கணிப்பு நடவடிக்கை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

நிறைவுகாண் மருத்துவ தொழில் வல்லுநர் ஒன்றியத் தின் நிர்வாகக்குழு நேற்று முன் தினம் கூடி இந்த தீர்மானத்தை மேற்கொண்டுள்ளது.

மேல் மாகாண ஆளுநரின் செயலாளரிடமிருந்து பெறப் பட்ட எழுத்துபூர்வ இணக்கப் பாட்டின் அடிப்படையில் பணிப்புறக்கணிப்பு நடவடிக் கையை இடைநிறுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டதாக நிறை வுகாண் மருத்துவ தொழில் வல்லுநர் ஒன்றியத்தின் செயலாளர் சானக தர்ம விக்ரம தெரிவித்துள்ளார்.

இதன்படி, மேல் மாகாண சபையின் கீழ் உள்ள அனைத்து வைத்திய சாலைகளின் சேவைகளும் வழமை போன்று முன்னெடுக் கப்படும் என அவர் குறிப்பிட் டார். (அ)

# பியங்கர ஜயரத்ன மீது மோசடிக் குற்றச்சாட்டு!

## மூன்று வழக்குகள் தாக்கல்

கொழும்பு, பெப். 20

முன்னாள் அமைச்சர் பியங் கர ஜயரத்ன சிவில் விமான சேவைகள் அமைச்சராக பதவி வகித்த காலத்தில் ஊழல் மோச டிகள் செய்ததாக கொழும்பு மேல் நீதிமன்றத்தில் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

பியங்கர ஜயரத்ன, அமைச் சராக இருந்த காலத்தில் சிலா பத்தில் உள்ள தனது வங்கிக் கணக்கில் 4,94,000 ரூபா பணத்தை வைப்பிலிடுமாறு அதிகாரிகளை வற்புறுத்தியதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்த நிலையில், சிலாபம் தேசிய சேமிப்பு வங்கிக் கணக் குக்கு 494,000 ரூபாயை மாற்றி அரசாங்கத்துக்கு நட்டத்தை ஏற்படுத்தியதாகவும் சிவில் விமான சேவைகள் அதிகார சபையின் அதிகாரிகளை தவறாக வழிநடத்தியதாகவும் இலஞ்ச ஊழல் ஆணைக்குழு இந்த வருடம் ஜனவரி மாதம் முன்னாள் அமைச்சருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்தது.

முன்னாள் சிவில் விமான சேவைகள் அமைச்சர் பியங்கர ஜயரத்னவுக்கு எதிராக ஊழல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் இலஞ்ச ஊழல் ஆணைக்குழு மொத்தம் 3 வழக்குகளை தாக்கல் செய்துள்ளது.

3,000 வெசாக் வாழ்த்து அட்டைகள் அச்சிடப்பட்ட மையால் இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகார சபைக்கு ஏற்பட்ட 128,520 ரூபா நட்டம் தொடர்பிலும் வழக்கு தாக்கல் செய்யப்பட் டுள்ளதாக இலஞ்ச ஊழல் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

சிவில் விமானப் போக்குவ ரத்து அதிகார சபையின் அதி காரிகள் தவறாக வழிநடத்தப் பட்டு தனியார் நிறுவனத்திற்கு 360,000 ரூபா பணம் செலுத்தி அரசுக்கு இழப்பை ஏற்படுத்தி யதாக மற்றொரு வழக்கும் பதிவு செய்யப்பட்டுள்ளது. (அ)

# முன்னாள் எம்.பியும் மகனும் கைது!

கொழும்பு, பெப். 20

புத்தளம் மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சாந்த அபே சேகர மற்றும் அவரது மகன் ஆகியோர் குற்றப் புலனாய்வுத் திணைக் களத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சட்டவிரோதமாக ஒன்று சேர்க்கப்பட்ட வாகனத்தை பயன்படுத்திய சம்பவம் தொடர்பாக அவர்கள் கைது செய்யப்ப ட்டுள்ளனர்.

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் சட்ட விரோத சொத்துக்கள் விசாரணைப் பிரிவின் விசாரணையைத் தொடர்ந்து இந்தக் கைது நடவடிக்கை இடம்பெற் றதாக பொலிஸார் தெரி வித்துள்ளனர். (அ)

# துப்பாக்கிச்சூட்டில் தந்தை, மகள் பலி!

## மகன் படுகாயம்! மீதெனியவில் சம்பவம்

கொழும்பு, பெப். 20

மீதெனிய பொலிஸ் பிரி வுக்கு உட்பட்ட பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஆணொருவரும், அவரது ஆறு வயது மகளும் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன் தினம் இரவு 10.15 மணியளவில் இந்த துப் பாக்கிச் சூட்டுச் சம்பவம் பதிவாகியுள்ளது.

தனது மகன் மற்றும் மகளு டன் மோட்டார் சைக்கிளில் பயணித்த கல்பொத்த பகுதி யைச் சேர்ந்த 39 வயதுடைய நபர் மீது அடையாளம் தெரி யாத குழுவினர் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டுள் ளனர்.

இதனால், மோட்டார் சைக் கிளின் சாரதியான தந்தை சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

அவரது மகனும், மகளும் முறையே எம்பிலிப்பிட்டிய மற்றும் தங்காலை வைத்திய சாலைகளில் பலத்த காயங்க ளுடன் அனுமதிக்கப்பட்டனர்.

இதன்போது, ஆறு வயது மகள் தங்காலை வைத்தியசா லையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்துள்ளார்.

படுகாயமடைந்த மகன் எல்பிலிப்பிட்டிய வைத்தியசா லையில் இருந்து மேலதிக சிகிச்சைக்காக இரத்தினபுரி பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த துப்பாக்கிச் சூட்டுக்கு ரி-56 ரக துப்பாக்கி பயன்படுத் தப்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளி யிட்டுள்ளனர். (அ)

# இலங்கையின் தயாரிப்பு, பணிகள் நடவடிக்கை ஜனவரியில் வளர்ச்சி!

கொழும்பு, பெப். 20

கொள்வனவு முகாமையா ளர் சுட்டெண்கள், 2025 ஜனவரியில் தயாரிப்பு மற்றும் பணிகள் நடவடிக்கைகள் இரண்டிலும் வளர்ச்சியை பதிவு செய்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள் ளது.

தயாரிப்பிற்கான இலங்கைக் கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் (கொ.மு.சு தயா ரிப்பு), 2025 ஜனவரியில் 59.0 சுட்டெண் பெறுமதியினைப் பதிவு செய்தது.

இது தயாரிப்பு நடவடிக் கைகளில் மேலும் விரிவடை தலை எடுத்துக்காட்டுகின்றது. இம்மேம்பாட்டிற்கு அனைத்துச் சுட்டெண்களும் சாதகமாகப் பங்களித்தன.

அடுத்த மூன்று மாதங்க ளுக்கு உற்பத்தி நடவடிக்கை களுக்கான கண்ணோட்டம் நேர்மறையானதாக உள்ளது, மேம்பட்ட வணிக நிலைமை களை எதிர்பார்ப்பதாகவும் இலங்கை மத்திய வங்கி குறிப்பிட்டுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு தவிர ஏனைய மாகாணங்களுக்கு போதியளவு நிதியை அரசு ஒதுக்கவில்லை

## சாமர சம்பத் எம்.பி. குற்றச்சாட்டு

கொழும்பு, பெப். 20

**வடக்கு மாகாண அபிவிருத்திக்கு 5000 மில்லியன் ரூபாவும், முல்லைத்தீவு பகுதியில் பாலம் நிர்மாணிப்புக்கு 1000 மில்லியன் ரூபாவும் என்ற அடிப்படையில் 6000 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால் ஏனைய மாகாணங்களுக்கு இவ்வாறு பாரிய நிதி ஒதுக்கப்படவில்லை. அனைத்து மாகாணங்களுக்கும் அபிவிருத்திக்கு சமமான வகையில் நிதி ஒதுக்க வேண்டும் என புதிய ஜனநாயக முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தெரிவித்தார்.**

பாராளுமன்றத்தில் நடைபெற்ற 2025ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க வரவு-செலவுத் திட்டத்தின் ஊடாக ஐசிங் பூசிய கேக்கினை முன்வைத்துள்ளார். குறிப்பிட்டுள்ள திட்டங்கள் அனைத்தையும் நிறைவேற்ற வேண்டும் இல்லையேல் பிரச்னைகள் மாத்திரமே மிகுதியாகும்.

நலன்புரி கொடுப்பனவுகள் அதிகரித்துள்ளதை வரவேற்கிறேன். பல்கலைக்கழக மாணவர்களுக்கு வழங்கப்படும் மாஹாபொல கொடுப்பனவு 2500 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

களனி பல்கலைக் கழகத்தின் மாணவர்கள் தான் கடந்த காலங்களில் மக்கள் விடுதலை முன்னணிக்கு சார் பாக செயற்பட்டு கடந்த அரசாங்கங்களுக்கு எதிராக



போராட்டத்தில் ஈடுபட்டார்கள். களனியில் இருந்து கொழும்புக்கு பேரணியாக வருவார்கள். ஆகவே தற்போது அதிகரித்துள்ள கொடுப்பனவை மேலும் அதிகரிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

எமது அரசாங்கத்தில் முன்பிள்ளை பாடசாலை ஆசிரியர்களின் சம்பளம் 2000 ரூபாவால் அதிகரிக்கப்பட்டது. ஆனால் இந்த வரவு-செலவுத் திட்டத்தில் 1000 ரூபாய் மாத்திரமே அதிகரிக்கப்பட்டுள்ளது. தற்போதைய வாழ்க்கைச் செலவுக்கு இது போதுமானதல்ல. இந்த தீர்மானத்தை மீளாய்வு செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

வடக்கு மாகாண அபிவிருத்திக்கு 5000 மில்லியன் ரூபாவும், முல்லைத்தீவு பகுதியில் பாலம் நிர்மாணிப்புக்க 1000 மில்லியன் ரூபாவும் என்ற அடிப்படையில் 6000 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

ஆனால் ஏனைய மாகாணங்களுக்கு இவ்வாறு பாரிய நிதி ஒதுக்கப் படவில்லை. அனைத்து மாகா ணங்களுக்கும் அபிவிருத்திக்கு சமமான வகையில் நிதி ஒதுக்க வேண்டும்.

மக்கள் தமது குறைகளை எங்களிடம் குறிப்பிடுகிறார்கள். அந்த குறைகளை நாங்கள் அரசாங்கத்திடம் குறிப்பிடுவோம். அந்த குறைகளுக்கு முறையான தீர்வினை பெற்றுக் கொடுக்காவிடின் கோட்டபய அரசாங்கத்துக்கு ஏற்பட்ட கதியே நேரிடும்-என்றார். (அ)

# குடிதண்ணீரை சிக்கனமாக பயன்படுத்துக!

கொழும்பு, பெப். 20

நாட்டில் தற்போது நிலவும் வறண்ட காலநிலை காரணமாக, குடிதண்ணீரைச் சிக்கனமான பயன்படுத்துமாறு நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை அறிவுறுத்தியுள்ளது.

வறண்ட காலநிலையினால் நீர் மூலங்களில் நீர்மட்டம் வேகமாகக் குறைந்து வரும் அதேவேளை, அதிக வெப்பம் காரணமாக நுகர்வோரிடையே நீரின் பாவனையும் அதிகரித்துள்ளது.

இதனால், நீர் விநியோகத்துக்குப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

எனவே, வாகனங்களைக் கழுவுதல் மற்றும் வீட்டுத் தோட்டப் பயிர்ச் செய்கை என்பவற்றுக்கு நீரைப் பயன்படுத்துவதைக் குறைத்து, அத்தியாவசிய அன்றாட தேவைகளுக்கு மாத்திரம் பயன்படுத்துமாறு நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை கோரியுள்ளது. (அ)

# சுற்றுலாத்துறை வருமானம் 34.5 சதவீதமாக அதிகரிப்பு!

கொழும்பு, பெப். 20

கடந்த வருடத்துடன், ஒப்பிடுகையில் ஜனவரி மாதத்தில் சுற்றுலாத்துறை வருமானம் 34.5 சதவீதம் அதிகரித்துள்ளதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

அதற்கமைய, கடந்த ஜனவரி மாதத்தில் 362.1 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வருமானம் ஈட்டப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு ஜனவரி மாதத்தில் சுற்றுலாத்துறை வருமானமானது 269.3 மில்லியன் டொலர்களாக பதிவாகியி ருந்தது.

அதேநேரம் 2024 ஆம் ஆண்டில் மொத்தமாக 3.17 பில்லியன் அமெரிக்க டொலர் சுற்றுலா வருமானமாக ஈட்டப்பட்டுள்ளது.

இது முந்தைய ஆண்டில் பதிவான 2.07 பில்லியன் ரூபாவுடன் ஒப்பிடும்போது 53.2 சதவீதம் அதிகரித்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது. இந்த ஆண்டின் முதல் 44 நாட்களில் சுற்றுலாப் பயணிக ளின் வருகையும் அதிகரித்துள் ளது.

அதற்கமைய, கடந்த பெப்ரவரி 13 ஆம் திகதி வரை இலங்கைக்கு வருகைதந்த வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை ஒரு வருடத்திற்கு முன்பு இருந்ததை விட 19.9 சதவீதம் அதிகரித்து 3,67,804 ஆகப் பதிவாகியுள்ளதாகச் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது. (அ)

# பருவகாலச் சீட்டை வைத்திருப்போரை பஸ்களில் ஏற்ற மறுத்தால் நடவடிக்கை!

கொழும்பு, பெப். 20

மாதாந்த பருவகாலச் சீட்டை வைத்திருக்கின்ற பாட சாலை மாணவர்கள், தொழில் நுட்பக் கல்லூரி மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் முதியவர்கள் ஆகி யோரை,

இலங்கைப் போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ்களில் ஏற்றிச் செல்வது கட்டாயமாக்கியுள்ளது.

யாரேனும் ஊழியர் ஒருவர் இந்த பருவகாலச் சீட்டை வைத்திருப்பவர்களை ஏற்றிச் செல்ல மறுத்தால், அது இலங்கைப் போக்குவரத்துச் சபை கொள்கையின்படி கடுமையான குற்றமாகும் என்று இலங்கை போக்குவரத்துச் சபை தெரிவித்துள்ளது.

பவபருவகால சீட்டை வைத்திருப்பவர்கள் அனைவரையும் இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பஸ்களில் ஏற்றிச் செல்லப்பட வேண்டும் என்று அவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், அவர்களை ஏற்றிச் செல்ல மறுக்கும் பஸ் ஊழியர்களுக்கு எதிராக கடுமையான ஒழுக்காற்று நடவடிக்கைகளை எடுக்க தீர்மானித்துள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக ஏதேனும் அசௌகரியங்களை எதிர் கொள்ளும் பருவகாலச் சீட்டை வைத்திருப்பவர்கள்,

1958 என்ற எண்ணை அழைத்து தகவல் மையத்திற்கு தெரிவிக்குமாறு இலங்கை போக்குவரத்துச் சபை வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# சுகாதாரத்துறைப் பிரதானிகளை சந்தித்த ஜனாதிபதியின் செயலர்!

கொழும்பு, பெப். 20

ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க மற்றும் சுகாதாரத் துறை பிரதானிகளுக்கு இடையில் நேற்று முன் தினம் ஜனாதிபதி அலுவலகத்தில் விசேட கலந்துரையாடலொன்று நடைபெற்றுள்ளது.

அதன்படி அரச மருத்துவமனைகளில் அறுவை சிகிச்சைகளுக்காக அதிக எண்ணிக்கையிலான நோயாளிகள் வரிசையில் காத்திருப்பதால், அந்த வரிசைகளைக் குறைக்க ஜனாதிபதி நிதியத்தின் ஊடாக மேற்கொள்ளக் கூடிய நடவடிக்கைகள் குறித்து இதன்போது ஆராயப்பட்டிருந்தது.

இந்தக் குழு ஒரு மாதத்திற்குள் இது தொடர்பான அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும் என்றும், அதற்கேற்ப அடுத்த கட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் ஜனாதிபதியின் செயலாளர் தெரிவித்தார்.

இருதய , கண், சிறுவர் நோய் உள்ளிட்ட பல்வேறு நோய்களால் பாதிக்கப்பட்ட



ஏராளமான நோயாளர்கள் அரச மருத்துவமனைகளில் அறுவைச் சிகிச்சை செய்து கொள்ள வரிசையில் காத்திருக்கின்றனர். அவர்கள் எதிர்கொள்ளும் சிரமங்களை சமாளிக்க ஜனாதிபதி நிதியம் மற்றும் ஏனைய துறைகள் மூலம் வழங்கக்கூடிய நிவாரணம் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது.

மேலும், அரசு மருத்துவமனைகளில் அலுவலக நேரத்திற்குப் பிறகு அறுவை சிகிச்சைகள் செய்வதற்கான சாத்தியக்கூறுகள் குறித்தும், மருத்துவர்கள் மற்றும் மருத்துவப் பணியாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்னைகள் குறித்தும் விரிவாக ஆராயப்பட்டது.

இதில் சுகாதார பிரதி அமைச்சர் முதித ஹன்சக விஜேமுனி, சுகாதார மற்றும் ஊடக அமைச்சின் செயலாளர் மருத்துவர் அனில் ஜாசிங்க, மேலதிக செயலாளர் (மருத்துவ சேவைகள்) வைத்தியர் லக்ஷ்மி சோமதுங்க, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அசேல குணவர்தன, ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிகச் செயலாளர் ரோஷன் கமகே ஆகியோரும் பிரதான மருத்துவமனைகளின் பணிப்பாளர்கள்,வைத்திய நிபுணர்கள் உள்ளிட்டோரும் இந்தக் கலந்துரையாடலில் கலந்து கொண்டனர். (அ)

# மு.கா முக்கியஸ்தர்கள் பாக். தூதருடன் சந்திப்பு



கொழும்பு, பெப். 20

முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீமின் அழைப்புக்கமைய, இலங்கைக்கான பாகிஸ்தான் தூதுவர் மேஜர் ஜெனரல் பஹீம்-உல்-அஸீஸ் மற்றும் முஸ்லிம் காங்கிரஸ் முக்கியஸ்தர்களுக்கும் இடையிலான கலந்துரையாடல் நேற்று முன் தினம் பாராளுமன்ற கட்டடத்தில் இடம்பெற்றது.

இதன்போது, லாஹூர் பிராந்திய கொன்சூல் ஜெனரல் யாஸின் ஜோயிஆ தலைமையில் தற்போது இலங்கை வந்துள்ள வர்த்தகத் தூது குழுவினர் வருகை தந்து, வர்த்தக துறையில் இங்கு முதலீடுகளை மேற்கொள்வது தொடர்பில் கலந்துரையாடினர்.

குறிப்பாக தகவல் தொழில்நுட்பம் மற்றும் உல்லாசப் பயணத்துறை தொழிலாண்மை என்பவற்றை மையப்படுத்தியதாக நடைபெற்ற இந்த கலந்துரையாடலில் முஸ்லிம் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர்களான கலாநிதி எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் மற்றும் எம்.எஸ். உதுமாலெப்பை ஆகியோர் பங்கேற்றனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கு அபிவிருத்தியை இந்தியாவிடம் பொறுப்பாக்கியுள்ளமை வெட்கக்கேடு!

## சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் சாடல்

கொழும்பு, பெப். 20

**கிழக்கு மாகாணத்தின் அபிவிருத்தியை அரசாங்கம் இந்தியாவிடம் பொறுப்பாக்கியுள்ளது. இது வெட்கக்கேடானது. அவ்வாறாயின், கிழக்கு மாகாண உறுப்பினர்கள் அனைவரும் இந்திய தூதுவரை சந்தித்து பிரச்னைகளை குறிப்பிட வேண்டும். வரவு - செலவு திட்டத்தில் கிழக்கு மாகாணத்தின் அடிப்படை பிரச்னைகளுக்கு தீர்வு முன்வைக்கப்படவில்லை. இந்த பாதீட்டை தூக்கியெறிய வேண்டும் - இவ்வாறு சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் பாராளுமன்ற உறுப்பினர் நிசாம் காரியப்பர் தெரிவித்துள்ளார்.**

நேற்று முன்தினம் அவர் பாராளுமன்றில் ஆற்றிய உரையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், 2025ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் கிழக்கு மாகாணத்தை முற்றாக புறக்கணித்துள்ளது என்றே குறிப்பிட வேண்டும். ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க முன்வைத்த வரவு செலவுத் திட்ட உரையில் " கிழக்கு மாகாணம் பொருளாதார வலயங்களில் மிகவும் முக்கியமான மாகாணம். அந்த மாகாணத்தின் கல்வி, சுகாதாரம், விவசாயம், கடற்றொழில், சுற்றுலாத்துறை,சமூக வலுவூட்டல் ஆகிய துறைகள் குறித்து விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

உட்கட்டமைப்பு மற்றும் ஜீவனோபாயத்தை மேம்படுத்துவதற்காக இந்திய கூட்டு நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் கிழக்கு மாகாணத்தை அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்" என்று குறிப்பிட்டுள்ளார்.

கிழக்கு மாகாணத்தின் அபிவிருத்தியை இந்தியாவிடம் இந்த அரசாங்கம் பொறுப்பாக்கியுள்ளது. இது வெட்கக்கேடானது.

அவ்வாறாயின் கிழக்கு மாகாண உறுப்பினர்கள் அனைவரும் இந்திய தூதுவரை சந்தித்து எமது பிரச்சினைகளை குறிப்பிட வேண்டும். அண்மையில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கால் கிழக்கு மாகாணமே மிக மோசமாக பாதிக்கப்பட்டது. கிழக்கு மாகாணத்தில் தற்போது குடிதண்ணீர் பிரச்னை தீவிரமடைந்துள்ளது. இது பாரிய பிரச்னையாகும் - என்றார். (ஐ)

# மோ. சைக்கிளில் தம்மை முந்திச் சென்றவரை தாக்கிய பொலிஸார்!

மட்டக்களப்பு, பெப். 20

மோட்டார் சைக்கிளில் சென்ற தம்மை முந்திச் சென்றார் என்று கூறி வர்த்தகர் ஒருவரை சிவில் உடை பொலிஸார் இருவர் தாக்கியுள்ளனர். இதில், அந்த நபர் காயமடைந்துள்ளார்.

ஏறாவூர் மயிலம்பாவெளியில் இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் அறிய வருவதாவது,

வந்தாறுமூலையில் இருந்து மட்டக்களப்பு நோக்கி மோட்டார் சைக்கிளில் பயணித்த வர்த்தகர் ஏறாவூர் - மயிலம்பாவெளி பகுதியிலுள்ள கிராம சேவகர் பணிமனைக்கு முன்னால் மற்றுமொரு மோட்டார் சைக்கிளை முந்திச் சென்றுள்ளார். இதையடுத்து, அந்த மோட்டார் சைக்கிளில் சென்ற பொலிஸார் இருவரும் முந்திச் சென்ற வர்த்தகரை மறித்துள்ளனர்.

தாம் இருவரும் பொலிஸ் அதிகாரிகள் என்றும் "நீ பிழையாக மோட்டார் சைக்கிளை செலுத்தியிருக்கிறாய்" என்றும் வர்த்தகரிடம் கூறியதை தொடர்ந்தே அவரைத் தாக்கியுள்ளனர்.

அதன் பின்னர், அங்கு கூடிய பொதுமக்கள் பொலிஸாரை அங்கிருந்து செல்லவிடாமல் தடுத்துள்ளனர்.

மக்கள் பொலிஸ் அவசர இலக்கமான 1919 தொலைபேசி இலக்கத்துக்கு அறிவித்ததையடுத்து, அங்கு ஏறாவூர் பொலிஸார் முச்சக்கரவண்டியில் வந்து விசாரணையை மேற்கொண்டபோது தாக்குதலை நடத்திய பொலிஸார் இருவரும் மதுபோதையில் இருந்தமை கண்டறியப்பட்டது.

மேலும், இருவரையும் மோட்டார் சைக்கிளில் பொலிஸ் நிலையத்துக்கு வருமாறு கூறியதுடன், முச்சக்கரவண்டியில் பொலிஸார் அவர்களை பின் தொடர்ந்துள்ளனர்.

இந்த நிலையில், பொலிஸ் நிலையத்தை அண்மித்ததும் சந்தேக நபர்கள் இருவரும் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர். (ஐ)

- மட்டக்களப்பு சிறைச்சாலையில் -

# கணவருக்கு போதைப்பொருள் கொண்டுசென்ற மனைவி கைது

மட்டக்களப்பு, பெப். 20

சிறையிலிருக்கும் கணவருக்கு சாப்பாட்டுடன் ஐஸ் போதைப் பொருளை மறைத்து வழங்க முயன்ற பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

கைதான பெண்ணின் கணவர் ஐஸ் போதைப்பொருளை வைத்திருந்த குற்றத்துக்காக சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். இந்த நிலையில், கணவரைப் பார்க்க வந்த குறித்த பெண் உணவுப் பொருட்களுடன் ஐஸ் போதைப் பொருளையும் எடுத்து வந்துள்ளார்.

சிறை அதிகாரிகளின் சோதனையில் ஐஸ் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டது. இதையடுத்து குறித்த பெண் கைது செய்யப்பட்டார்.

கைதான பெண்ணை நீதிமன்றில் முற்படுத்த மட்டக்களப்பு பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஐ)



சம்மாந்துறை - வளத்தாப்பிட்டி - வில்லுக்குள பகுதியில் புற்களை உண்பதற்காக நூற்றுக்கும் மேற்பட்ட யானைகள் கூடியவேளை...! (படம் - பாரூக் சிஹான்)

# மகளை தாக்கிய மருகமனை தட்டிக்கேட்டவர் அடித்து கொலை!

மட்டக்களப்பு, பெப். 19

தனது மகளை தாக்கிய மருகனை தட்டிக்கேட்டவரை பொல்லால் தாக்கிக் கொன்ற நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மட்டக்களப்பு - வாழைச்சேனை - சின்னவேம்பு கிராம பிரதேசத்தில் இந்த சம்பவம் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்றுள்ளது.இந்த சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த 66 வயது நபரே உயிரிழந்தார்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது, நேற்றுமுன்தினம் உயிரிழந்தவரின் மகளுக்கும் அவரின் கணவருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. இதன் போது, மனைவியை கணவன் தாக்கியுள்ளார். இதைக் கண்ட பெண்ணின் தந்தை மருமகனை தட்டிக் கேட்டுள்ளார்.

அந்தச் சமயம், மருமகன் பொல்லால் மாமனின் தலையில் அடித்துள்ளார். இதில், அவர் அந்த இடத்திலேயே விழுந்து உயிரிழந்தார்.சந்தேக நபரை வாழைச் சேனை பொலிஸார் கைது செய்துள்ளனர். (ஐ)

# ஒன்றரை மாத குழந்தை மரணம்!

மட்டக்களப்பு, பெப். 20


தாய்ப்பால் குடித்து விட்டு தாயாருடன் உறங்கிய ஒன்றரை மாத குழந்தை உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டது.

மட்டக்களப்பு - கடுக்காமுனை பகுதியில் கடந்த திங்கட்கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ஞாயிற்றுக்கிழமை இரவு குழந்தைக்கு தாய்ப்பால் புகட்டிவிட்டு இருவரும் உறங்கிய தாகவும் மறுநாள் காலையில் குழந்தை சுவாசமின்றி காணப்பட்டதாகவும் இதையடுத்து மருத்துவமனைக்கு கொண்டு சென்றபோது குழந்தை உயிரிழந்து விட்டதாகத் தெரிவிக்கப்பட்டதாக குழந்தையின் உறவினர்கள் தெரிவித்தனர்.

குழந்தையின் சடலத்தின் உடல்கூறுகள் பரிசோதனைக்காக பகுப்பாய்வு திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (ஐ)

# சாய்ந்தமருது ஹிதாயா குர்ஆன் பாடசாலையின் பரிசளிப்பு விழா!



சாய்ந்தமருது, பெப். 20

சாய்ந்தமருது மத்ரஸதுல் ஹிதாயா குர்ஆன் பாடசாலையின் பரிசளிப்பு விழா ஹிதாயா பள்ளிவாசலில் நடைபெற்றது.

மத்ரஸதுல் ஹிதாயா அதிபர் எஸ்.ஏ.எம். ஜினான் தலைமையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இந்த நிகழ்வில் தென்கிழக்கு பல்கலைக்கழக விரிவுரையாளர் மௌலவி ஏ. எல். சாஜித் /ஹஸைன் சிறப்பு அதிதியாக பங்கேற்றார்.

சாய்ந்தமருது ஜம்மியதுல் உலமா சபையின் தலைவர் மௌலவி எம்.எம்.எம். சலீம், அதன் செயலாளர் மௌலவி எச்.எம். நப்றாஸ், மஸ்ஜிதுல் ஹிதாயா பள்ளிவாசலின் தலைவர் அல்ஹாஜ் ஏ.எம். ஜௌபர், செயலாளர் ஏ.ஏ.ஏ. சத்தார், பொருளாளர் அல்ஹாஜ் ஐ.கே. நௌபர் ஆகியோர் கௌரவ அதிதிகளாக கலந்து கொண்டனர்.

இதன்போது அல்குர்ஆனை தஜ்வீத் முறைப்படி முழுமையாக ஓதி முடித்த 7 மாணவர்களுக்கு பதக்கம் அணிவிக்கப்பட்டு சான்றிதழ் மற்றும் பரிசு வழங்கி கௌரவிக்கப்பட்டதுடன் தஜ்வீத், தீனியாத், ஹதீஸ் போன்ற பரீட்சைகளில் கூடிய புள்ளிகள் பெற்ற மாணவர்களும் பரிசு வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில் மத்ரஸா மாணவர்களின் சிறப்பு நிகழ்ச்சிகளும் அரங்கேறின. (ஐ)

# போதைப்பொருட்களுடன் காத்தான்குடியில் 42 பேர் கைது!

காத்தான்குடி, பெப். 20

காத்தான்குடி பொலிஸார் நடத்திய திடீர் சுற்றிவளைப்பு நடவடிக்கையில் போதைப் பொருள் சார் குற்றங்களுடன் தொடர்புடைய 42 பேர் கைது செய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

நேற்று முன்தினம் நடத்தப்பட்ட தேடுதல் நடவடிக்கையில், ஐஸ் போதைப் பொருளுடன் 15 பேரும்,கேரள கஞ்சாவுடன் ஒருவரும், சட்டவிரோத சிகரெட்களுடன் இரு நபர்களும் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட 24 பேருமாக 42 பேர் கைது செய்யப்பட்டனர். அத்துடன், அவர்களிடமிருந்து போதைப் பொருட்களும் கைப்பற்றப்பட்டன.

கைதானவர்களை மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றில் முற்படுத்த காத்தான்குடி பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உக்ரைன் ஜனாதிபதியுடன் பேசுவதற்கு புடின் தயார்!

## ரஷ்ய அதிகாரிகள் அறிவிப்பு

மொஸ்கோ, பெப். 20

தேவைப்பட்டால் உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கியுடன் பேச்சு நடத்துவதற்கு ஜனாதிபதி விளாடிமிர் புடின் தயாராக இருக்கிறார் என்று ரஷ்யா அறிவித்துள்ளது.

மூன்று வருடங்களுக்கு மேலாக நீளும் ரஷ்யா - உக்ரைன் போரை முடிவுக்குக் கொண்டுவரும் நோக்கில் சவூதி அரேபியாவில் அமெரிக்கா - ரஷ்யா உயர் அதிகாரிகள் பேச்சு நடத்தி வருகின்றனர். இதன்போதே ரஷ்ய அதிகாரிகள் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

இந்த விடயம் தொடர்பில் ரஷ்ய ஜனாதிபதி மாளிகையின் செய்தித் தொடர்பாளர் டிமிட்ரி பெஸ்கோவ் கூறுகையில்,

"தேவைப்பட்டால் உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கியுடன் பேச்சு நடத்தத் தயாராக இருக்கிறார் என்று அதிபர் புடின் கூறியுள்ளார்.

முன்னதாக, "உக்ரைன் பங்கு பெறாமல் மேற்கொள்ளப்படும் எந்த அமைதி ஒப்பந்தத்தையும் நாங்கள் ஏற்க மாட்டோம்", என்று ஜெலன்ஸ்கி கூறியிருந்தமை கவனிக்கத்தக்கது.

அமெரிக்க ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் இரண்டாவது முறையாக பதவியேற்ற பின்னர் அமைதிப் பேச்சுக்கான அழுத்தம் அதிகரித்தது. புடின் மற்றும் ஜெலன்ஸ்கியுடன் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் தனித் தனியாக தொலைபேசி மூலம் உரையாடியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# உக்ரைனுடனான போரை நிறுத்த அமெரிக்கா - ரஷ்யா சமரச பேச்சு

## சவூதி அரேபியாவில் ஆரம்பமானது



ரியாத், பெப். 20

**உக்ரைன் போரை நிறுத்துவது தொடர்பில் நேற்று முன்தினம் அமெரிக்கா, ரஷ்யா உயர் அதிகாரிகள் சவூதி அரேபியாவில் பேச்சு நடத்தினர்.**

இந்தப் பேச்சில் ரஷ்யாவின் வெளிவிவகார அமைச்சர் செர்கேய் லாவ்ரோவ், அமெரிக்காவின் வெளிவிவகார செயலாளர் மார்கோ ரூபினியோவை சந்தித்தார்.

உக்ரைன் மற்றும் ஐரோப்பா இந்தப் பேச்சுக்கு அழைக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

பேச்சு குறித்து ரஷ்ய தரப்பில் கூறும்போது, "உக்ரைன் போரை முடிவுக்கு கொண்டுவருவது குறித்து சவுதி அரேபியாவில், அமெரிக்காவும் ரஷ்யாவும் நேர்மறையான, ஆக்கபூர்வமான 4 மணி நேர சந்திப்பை நடத்தின" என்று தெரிவித்துள்ளது.

முன்னதாக, இந்தப் போரை நிறுத்துவதற்கு ரஷ்யா எந்த அளவு உறுதியாக இருக்கிறது என்பதை அறிய இந்த பேச்சு முதல் படி என்று அமெரிக்காவும் இந்தப் பேச்சு அமெரிக்காவுடனான உறவை இயல்பாக்க உதவும் என நம்புவதாக ரஷ்யாவும் தெரிவித்துள்ளன. (ஐ)

# போருக்கு உக்ரைனே காரணம்! அமெரிக்க ஜனாதிபதி சாடல்!!

வாஷிங்டன், பெப். 20

ரஷ்யாவுடன் போர் ஏற்பட்டதற்கு உக்ரைனே காரணம் என்று தெரிவித்துள்ள அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், உக்ரைன் போரை ஆரம்பித்திருக்கக்கூடாது என்றும் கூறினார்.

ரஷ்ய ஜனாதிபதியை தான் சந்திக்கக்கூடும் எனத் தெரிவித்துள்ள டொனால்ட் ட்ரம்ப் மொஸ்கோவின் படையெடுப்புக்கு உக்ரைன் ஜனாதிபதியே காரணம் என்றார்.

உக்ரைன் போரை நிறுத்துவது தொடர்பில் சவூதியில் பேச்சு நடக்கிறது.



இது தொடர்பில் செய்தியாளர்களிடம் கருத்து வெளியிட்ட ட்ரம்ப்,

போர் நிறுத்தப் பேச்சில் பங்கேற்க உக்ரைனுக்கு இட மளிக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டை மறுத்துள்ளார்.

இந்தப் போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான திறமையும் அதிகாரமும் என்னிடம் இருப்பதாக நான் நினைக்கின்றேன். அது சரியான விதத்தில் இடம்பெறுகின்றது. எங்களை பேச்சுக்கு அழைக்கவில்லை என தெரிவிக்கின்றார்கள். நீங்கள் மூன்று வருடமாக இருக்கின்றீர்கள். நீங்கள் இதனை முடித்துவைத்திருக்க வேண்டும்.

நீங்கள் ஒருபோதும் இதனை ஆரம்பித்திருக்கக் கூடாது. நீங்கள் ஒப்பந்தம் ஒன்றுக்கு வந்திருக்கவேண்டும் உக்ரைனுக்காக நான் ஒப்பந்தத்துக்கு வந்திருப்பேன் - என்றும் கூறினார். (ஐ)

# பாப்பரசருக்கு நிமோனியா தொற்று

வத்திக்கான், பெப். 20

பாப்பரசர் பிரான்ஸிஸ்க்கு இரு நுரையீரல்களிலும் நிமோனியா தொற்று ஏற்பட்டுள்ளதாக வத்திக்கான் தெரிவித்துள்ளது.

88 வயதான பாப்பரசர் சுவாச நோயால் பாதிக்கப்பட்டு ரோமில் உள்ள ஜெமெல்லி மருத்துவமனையில் கடந்த 14ஆம் திகதி சேர்க்கப்பட்டார்.

இந்த நிலையில் அவருக்கு நடத்தப்பட்ட சி. ரி. ஸ்கான் பரிசோதனையில் இரு நுரையீரல்களிலும் நிமோனியா தொற்று ஏற்பட்டுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

பரிசோதனைகள், நெஞ்சு பகுதியில் எடுக்கப்பட்ட எக்ஸ்ரே மற்றும் மருத்துவ



அறிக்கைகள் நோய் ஆபத்தானது என்பதை காட்டுகின்றது.

இருந்தாலும், பாப்பரசர் நல்ல நிலையில் உள்ளாரென வும் "செபித்தல், ஓய்வெடுத்தல் மற்றும் பிரார்த்தனை செய்வதில் நாளை கழித்துவருகிறார்", என்றும் வத்திக்கான் தெரிவித்துள்ளது.

தனது உடல் நலத்திற்காக செபிக்குமாறு பாப்பரசர் கேட்டுக் கொண்டார் என்றும் வத்திக்கான் தெரிவித்துள்ளது. (ஐ)

# 150 வரையான திமிங்கலங்கள் ஆஸி. கடற்கரையில் ஒதுங்கின!



சிட்னி, பெப். 20

அவுஸ்திரேலிய கடற்கரையில் 150இற்கும் மேற்பட்ட திமிங்கலங்கள் ஒதுங்கியுள்ளன. இதில், 60இற்கும் மேற்பட்ட திமிங்கலங்கள் இறந்துள்ளன. கரையொதுங்கிய மேலும் பல திமிங்கலங்களை காப்பாற்ற அதிகாரிகள் முயன்று வருகின்றனர்.

தஸ்மானியா தீவின் வடமேற்கில் ஆர்தர் நிதிக்கு அருகில் இந்த திமிங்கலங்கள் கரையொதுங்கியுள்ளன.

கரையொதுங்கியவற்றில் 90 திமிங்கலங்கள் இளமையானவை - இவை இன்னமும் உயிருடன் உள்ளன என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

கரையொதுங்கிய திமிங்கலங்கள் ஓர்கா வகையை சேர்ந்தவை.

இவை சுமார் 6 மீற்றர் நீளமும் ஆயிரத்து 500 கிலோ எடையும் கொண்டவை.

இவற்றை உயிருடன் மீண்டும் கடலுக்கு அனுப்புவது என்பது மிகவும் கடினமான காரியம் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ஐ)

# உக்ரைனுக்கு செல்வதற்கு படைகள் தயார் நிலையில்!

## பிரிட்டன் இராணுவம் அறிவிப்பு

லண்டன், பெப். 20

உக்ரைன் கேட்டால் தனது படைகளை அங்கு நிலைநிறுத்தத் தயாராகவுள்ளதாக பிரிட்டன் இராணுவம் கூறியுள்ளது.

2 ஆயிரத்து 500 பிரிட்டிஷ் படையினர் உக்ரைன் எல்லையிலிருந்து சுமார் 25 கிலோ மீற்றர் தூரத்தில் ருமேனியாவில் நேட்டோ பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதேநேரம்,

நேட்டோவின் புதிய கூட்டணி ஐரோப்பா முழுவதும் 1400 மைல்கள் தொலைவில் 700இற்கும் மேற்பட்ட இராணுவ வாகனங்கள்,

அதிக எண்ணிக்கை யிலான படையினரை குறுகிய காலத்தில் நகர்த்தக்கூடிய




வல்லமையுடன் இருக்கின்றன என்று இங்கிலாந்து சுட்டிக்காட்டியுள்ளது.

(ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டார் ஓப்பன் ரென்னிஸ் ஜோகோவிச் தோல்வி!



கட்டார் ஓப்பன் ரென்னிஸ் தொடரில் முன்னணி வீரரான நோவக் ஜொகோவிச் அதிர்ச்சி தோல்வியடைந்தார்.

கட்டார் ஓப்பன் ரென்னிஸ் தொடர் டோஹாவில் நடக்கிறது. இதில், நேற்று நடந்த ஆண்கள் ஒற்றையர் பிரிவு முதல் சுற்றில் சேர்பியா வீரர் நோவக் ஜொகோவிச் மற்றும் இத்தாலி வீரரான மேட்டியோ பெரெட்டினி ஆகியோர் மோதினர்.

இதில் முதல் செற்றை போராடி வென்ற மேட்டியோ பெரெட்டினி, 2ஆவது செற்றை எளிதாக வென்றார். இதனால் முதல் சுற்றிலேயே சேர்பியா வீரர் ஜொகோவிச் தோல்வியடைந்து வெளியேறினார்.

ஜொகோவிச் முதல் சுற்றில் 4-7, 2-6 என்ற கணக்கில் தோல்வியடைந்தது ரசிகர்களிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. (ஐ)


# சதத்தில் முந்திய பென் கரண்!

ஹராரே, பெப். 20

சிம்பாவேயின் பென் கரண் அயர்லாந்து அணிக்கு எதிராக தனது முதல் சதத்தை பதிவு செய்துள்ளார்.

அயர்லாந்துக்கு எதிராக நேற்று முன்தினம் நடந்த போட்டியில் அவர் 118 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் குவித்திருந்தார்.

அவரின் இந்த சதம் அவரின் குடும்பத்தில் பதிவு செய்யப்பட்ட முதல் சதமாகும். பென் கரணின் சகோதரர்களான ரொம் கரண், சாம் கரண் ஆகியோர் இங்கிலாந்து அணிக்காக விளையாடி வருகின்றனர். இவர்கள் இருவரும் சர்வதேச போட்டிகளில் ஒரு சதம் கூட அடிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.




சம்பியன்ஸ் கிண்ணம்:

## சர்ச்சை வெடித்ததையடுத்து இந்திய கொடி ஏற்றப்பட்டது

கராச்சி, பெப். 20

சம்பியன்ஸ் கிண்ணத் தொடர் நடக்கும் பாகிஸ்தானின் மைதானங்களில் இந்திய கொடி பறக்கவிடப்படவில்லை என்று சர்ச்சை வெடித்தது. இதையடுத்து இந்திய தேசியக் கொடி நேற்று ஏற்றப்பட்டது.

சம்பியன்ஸ் கிண்ணப் போட்டிக்காக இந்திய அணி பாதுகாப்பு கருதி பாகிஸ்தான் செல்ல மறுத்து விட்டது. இதனால் இந்திய அணியுடனான போட்டிகள் ஐக்கிய அரபு எமிரேட்ஸின் டுபாயில் நடக்கவுள்ளன.

எனினும், போட்டி நடக்கும் பாகிஸ்தானில் தொடர் நடக்கும் கராச்சி, லாகூர், ராவல்பிண்டி மைதானங்களில் விளையாடும் 8 நாடுகளின் தேசிய கொடிகள் ஏற்றப்பட வேண்டும். ஆனால், இங்கு இந்திய தேசிய கொடி ஏற்றப்படவில்லை என்று சர்ச்சை வெடித்தது.

இந்த நிலையில் சர்ச்சையை தொடர்ந்து இந்திய தேசியக் கொடி பாகிஸ்தான் மைதானங்களில் ஏற்றப்பட்டது. (ஐ)

## ஐ. சி. சி. விருதை சனத்திடம் பெற்றார் கமிந்து மெண்டிஸ்




கொழும்பு, பெப். 20

ஐ. சி. சியின் சிறந்த வீரருக்கான விருதை சனத் ஜெயசூரியாவிடமிருந்து கமிந்து மெண்டிஸ் பெற்றுக்கொண்டார்.

சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி.) ஆண்டுதோறும் சிறந்த டெஸ்ட், ஒருநாள், இருபது - 20 அணிகள் மற்றும் சிறந்த வீரர், வீராங்கனைகளை தெரிவு செய்து கௌரவித்து வருகிறது.

ஆண்டு முழுவதும் வீரர், வீராங்கனைகள் சிறப்பாக செயல்பட்ட விதத்தை கணக்கில் கொண்டு இந்த கௌரவத்துக்கு தெரிவு செய்யப்படுவார்கள்.

இதன்படி, 2024ஆம் ஆண்டுக்கான வளர்ந்து வரும் வீரர் விருதுக்கு 4 வீரர்களின் பெயர்களை ஐ. சி. சி. பரிந்துரைத்திருந்தது.

இலங்கையின் துடுப்பாட்ட வீரர் கமிந்து மெண்டிஸ், இங்கிலாந்தை சேர்ந்த வேகப்பந்து வீச்சாளர் கஸ் அட்கின்சன், பாகிஸ்தானின் சைம் அயூப், மேற்கிந்தியத் தீவுகளின் வேகப்பந்து வீச்சாளர் ஷமர் ஜோசப் ஆகியோர் அந்தப் பரிந்துரையில் இடம்பெற்றிருந்தனர்.

இதில் 2024ஆம் ஆண்டின் வளர்ந்து வரும் வீரர் விருதை இலங்கையின் கமிந்து மெண்டிஸ் தட்டி சென்றார். அந்த விருதை வென்ற கமிந்து மெண்டிஸ் இலங்கை அணியின் தலைமை பயிற்றுநர் சனத் ஜெயசூர்யாவிடம் இருந்து பெற்று கொண்டார்.

இலங்கை அணியின் தலைமை பயிற்றுநராக சனத் ஜெயசூர்யா நியமிக்கப்பட்டதில் இருந்து இலங்கை அணி பல தொடர்களை வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## கெய்லை பின்தள்ள கோலிக்கு வாய்ப்பு!

புதுடில்லி, பெப். 20

சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில் அதிக ஓட்டங்கள் குவித்த வீரர்கள் பட்டியலில் கெய்லை பின்தள்ளி இந்தியாவின் விராட் கோலி முதல் இடம் பிடிக்க வாய்ப்பு கிட்டியுள்ளது.

சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில் மேற்கிந்தியத் தீவுகளின் கிறிஸ் கெய்ல் முதலிடம் (17 போட்டிகளில் 3 சதங்கள் உள்பட 791 ஓட்டங்கள்) வகிக்கிறார்.

2ஆவது இடத்தில் இலங்கையின் மஹேல ஜெயவர்த்தன (742 ஓட்டங்கள்), 3ஆவது இடத்தில் இந்தியாவின் ஷிகர் தவானும் ( 701 ஓட்டங்கள்) உள்ளனர். இவர்கள் அனைவரும் ஓய்வு பெற்று விட்டனர்.

இந்த நிலையில் விராட்கோலி 13 போட்டிகளில் விளையாடி 529 ஓட்டங்களை எடுத்துள்ளார். அவர் 263 ஓட்டங்களை எடுத்தால் கெய்லின் சாதனையை முறியடிக்க வாய்ப்புள்ளது.

இந்திய அணியின் தலைவர் ரோஹித் சர்மா 481 ஓட்டங்கள் எடுத்துள்ளார். அநேகமாக ரோஹித் சர்மாவின் கடைசி சம்பியன்ஸ் கிண்ணப் போட்டியாக இது இருக்கும் என்பதால் அவரும் முத்திரை பதிக்க முயற்சிப்பார்.

அதிக விக்கெட் வீழ்த்தியோர் பட்டியலில் முதல் 3 இடங்களில் நியூசிலாந்தின் கைல் மில்ஸ் (28 விக்கெட்), இலங்கையின் மலிங்க (25 விக்கெட்), முரளிதரன் (24 விக்கெட்) ஆகியோர் உள்ளனர். (ஐ)



## மகனுடன் விளையாடுவதற்காக ஓய்வு முடிவை மாற்றிய முகமது!

காபூல், பெப். 20

மகனுடன் சேர்ந்து விளையாடும் ஆசையால் ஆப்கானிஸ்தானின் முன்னணி வீரர் முகமது நபி தனது ஓய்வு முடிவை திரும்பப் பெற்றுள்ளார்.

முன்னதாக அவர், சம்பியன்ஸ் கிண்ணத் தொடருடன் சர்வதேச ஒருநாள் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்திருந்தார். இவர் கடந்த 2019ஆம் ஆண்டு டெஸ்ட் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்றார். அதன் பின்னர் ஒருநாள் மற்றும் இருபது - 20 போட்டிகளில் தற்போது ஆடி வருகிறார்.

இந்நிலையில் முகமது நபி தனது ஓய்வு முடிவை தற்போது திரும்ப பெற்றுள்ளார். ஆப்கானிஸ்தான் அணிக்காக சர்வதேச ஒருநாள் போட்டிகளில் தனது மகனுடன் சேர்ந்து விளையாட விருப்பம் ஏற்பட்டுள்ளதால் முடிவை மாற்றியுள்ளார்.

முகமது நபியின் மகனான ஹசன் ஐசாகில் (வயது 18) ஆப்கானிஸ்தான் அணிக்காக கடந்த இளையோர் உலகக்கிண்ணத்தில் விளையாடினார். இதனால் அவர் விரைவில் ஆப்கானிஸ்தான் அணியில் இடம் பெறுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## அயர்லாந்துடனான தொடர் சிம்பாவேயின் வசமானது!




ஹராரே, பெப். 20

பென் கரணின் சிறப்பான சதத்தின் உதவியால் அயர்லாந்துக்கு எதிரான கடைசி ஒருநாள் போட்டியை 9 விக்கெட்களால் வெற்றி கொண்ட சிம்பாவே தொடரையும் தன் வசமாக்கியது.

அயர்லாந்து கிரிக்கெட் அணி சிம்பாவேக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டு 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடியது.

முதல் 2 போட்டிகளில் இரு அணிகளும் தலா ஒரு வெற்றி பெற்ற நிலையில் தொடர் 1-1 என்ற கணக்கில் சமனிலையில் இருந்தது.

இந்த இரு அணிகளுக்கும் இடையிலான 3ஆவது மற்றும் கடைசி போட்டி நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வென்ற சிம்பாவே பந்துவீச்சை தெரிவு செய்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய அயர்லாந்து 50 ஓவர்கள் முடிவில் 6 விக்கெட்களை இழந்து 240 ஓட்டங்களை எடுத்தது.

அதிகபட்சமாக பால்பிர்னி 64 ஓட்டங்களை எடுத்தார்.

241 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய சிம்பாவே அணிக்கு பிரையன் பென்னட், பென் கரண் தொடக்கம் கொடுத்தனர்.

பென்னட் 48 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். பின்னர் களமிறங்கிய கிரெய்க் எர்வினும் சிறப்பாக விளையாட சிம்பாவே எளிதில் வெற்றி பெற்றது.

39.3 ஓவர்களில் ஒரு விக்கெட்டை மட்டுமே இழந்த சிம்பாவே 246 ஓட்டங்கள் எடுத்து அபார வெற்றி பெற்றது.

பென் கரண் 118 ஓட்டங்களுடனும் கிரெய்க் எர்வின் 69 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

இதன் மூலம் 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை சிம்பாவே 2-1 என்ற கணக்கில் கைப்பற்றியது.

பென் கரண் ஆட்ட நாயகனாகவும், பிரையன் பென்னட் தொடர் நாயகனாகவும் தெரிவாகினர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடவுச்சீட்டு...

கொழும்பு கோட்டை - பத்திர முல்லை வரை இ. போ. ச. இரவு நேர பஸ் சேவையும் நடத்தப்படுகிறது. கடவுச்சீட்டுக்கான அவசர தேவை கொண்டவர்கள் மாத்திரம் பணிமனைக்கு வருகை தந்து பெற்றுக்கொள்ள முடியும். தற்போது போதுமான கடவுச்சீட்டுகள் கையிருப்பில் உள்ளமையால் வரிசைகளில் காத்திருக்கவேண்டிய நிலை ஏற்படாது என்றும் அமைச்சர் கூறினார். (ஐ)

## கொலைக்கு...

சஞ்சீவ கொலைச் சந்தேகநபர் புத்தளம் - பாலாவியில் வைத்துக் கைது செய்யப்பட்டார். இந்த நிலையில் அவருக்கு துப்பாக்கியை கடத்த உதவிய பெண்ணை புத்தளம் - கற்பிட்டி பகுதியில் பொலிஸார் தேடி வருகின்றனர்.

நீர்கொழும்பை சேர்ந்த பின்புரா தேவகே இஷாரா செவந்தி என்ற 26 வயது பெண்ணே இவ்வாறு தேடப்படுகிறார்.

இவர் இந்தியாவுக்கு படகு மூலம் தப்பிச்செல்லும் நோக்கில் கற்பிட்டி பகுதிக்கு வந்திருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகம் வெளியிட்டனர். (ஐ)

## வலுவான...

கொழும்பு சினமன் ஹோட்டலில் நேற்று நடந்த வரவு - செலவு திட்டத்துக்கு பின்னரான கருத்தாடலில் பங்கேற்று உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், கடன் மறுசீரமைப்பு மூலம் கிடைத்த மூன்று வருட சலுகைக் காலத்தை சிறந்த முறையில் பயன்படுத்தி, 2028ஆம் ஆண்டுக்குள் சரியான பொருளாதார முகாமைத்துவத்தின் மூலம் கடனை திருப்பிச் செலுத்தும் திறனை அடைய அரசாங்கம் எதிர்பார்க்கிறது.

வங்குரோத்தடைந்த ஒரு நாட்டை மீண்டும் கட்டியெழுப்ப பல உலக நாடுகளுக்கு ஒரு தசாப்தம் வரை சென்றாலும், இலங்கை அதிலிருந்து மீள்வதற்கு ஒரு தசாப்தத்துக்கும் குறைவான காலமே செல்லும் என்று கணிப்பிட முடியும். இந்த ஆண்டு வரவு - செலவு திட்டத்தில் அரச வருவாயை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 15.1 வீதமாக அதிகரிக்க முன்மொழியப்பட்டுள்ளது. முன்னுரிமை அடிப்படையில் நிதியை செலவிடுவதே அரசாங்கத்தின் எதிர்பார்ப்பாகும்.

பொருளாதாரத்தை விஸ்தரித்து பொருளாதாரத்தை கிராமங்களுக்கு கொண்டு செல்வதன் மூலமும், குடிமக்களைப் பொருளாதாரத்தின் ஒரு பகுதியாக மாற்றுவதற்கும் இம்முறை வரவு - செலவுத் திட்டத்தின் ஊடாக கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இதனால் குடிமக்கள் பயனடையும் திறனை அதிகரிக்க முடியும்.

பொருளாதாரத்தில் இருந்து விலக்கி வைக்கப்பட்ட குழுக்களை மீண்டும் பொருளாதாரத்துக்குள் கொண்டுவருவதன் மூலம் கிராம மட்டத்தில் சிறிய பொருளாதார அலகுகளை உருவாக்க தற்போதைய அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. இதன்படி, சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முனைவோரை உருவாக்குவதற்கான ஆர்வத்தை நாட்டில் உருவாக்க எதிர்பார்க்கிறோம்.

கிராமப்புற வறுமையிலிருந்து நாட்டை கட்டியெழுப்புவதற்காக கல்விக்காக இந்த ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தில் அதிகளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் பாடசாலை கட்டமைப்பில் மனித மற்றும் பௌதிக வளங்களை மறுசீரமைக்க எதிர்பார்த்துள்ளோம்.

அரசியல் அதிகாரத்தை ஊழல் இல்லாத இடமாக மாற்றியுள்ளோம். இலஞ்சம் கொடுக்காத கலாசாரத்தை உருவாக்குவது குடிமக்களின் பொறுப்பாகும் - என்றார். (ஐ)

## தங்காலை...

படுகாயமடைந்து தங்காலை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். எனினும், அவரும் சிகிச்சை பலனின்றி நேற்று புதன்கிழமை காலை உயிரிழந்தார்.

(தொடர்புடைய செய்தி பக்கம் - 6இல்)

## சட்டத்தரணிகளும்...

அடுத்தே இந்த உத்தரவை பொலிஸ் மா அதிபர் பிறப்பித்துள்ளார்.

மேலும், "இந்த துப்பாக்கிச் சூடு, ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளிகளுக்கும் போதைப்பொருள் கும்பல்களுக்கும் இடையிலான மோதல்களின் விளைவாகும். நீதிமன்றில் சட்டத்தரணிகள் சோதனையிடப்படாததை சாதகமாக்கியே இந்தக் கொலை இடம்பெற்றுள்ளது.

எனவே, இனிமேல் சட்டத்தரணிகளும் நீதிமன்றத்துக்குள் நுழையும் முன்பு சோதனையிடப்படுவர். இந்த விடயம் தொடர்பில் நீதி சேவை ஆணைக்குழுவிடம் பேசப்படும்.

நீதிமன்ற வளாகத்தின் பாதுகாப்புக்காக ஆயுதமேந்திய பொலிஸார் நியமிக்கப்படுவர் என்றும் அவர் கூறினார். (ஐ)

## சாட்சிக்...

பூஸா சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த கணேமுல்லை சஞ்சீவ சாட்சியளிப்பதற்காக நேற்றைய தினம் புதுக்கடை நீதிமன்றத் தொகுதிக்கு அழைத்து வரப்பட்டிருந்தார்.

நீதிவான் அறை எண் 5இல் வழக்கு நடந்து கொண்டிருந்தது. கணேமுல்லை சஞ்சீவ சாட்சியமளிப்பதற்காக சாட்சிக் கூண்டுக்கு வந்தபோது, சட்டத்தரணி வேடத்திலிருந்தவர் அவரை கைத்துப்பாக்கியால் சுட்டார். இதனால், நீதிமன்றத்துக்குள் அமைதியின்மை ஏற்பட்டது. நீதிமன்ற அறைக்குள் இருந்தவர்கள் வெளியே ஓடினார்கள். அப்போது, கொலையாளியும் அங்கிருந்து தப்பியோடினார் என்று பொலிஸ் பேச்சாளர் புத்திக மனதுங்க தெரிவித்தார்.

துப்பாக்கிச் சூட்டுக்குப் பயன்படுத்தப்பட்ட கைத்துப்பாக்கி (ரிவால்வர்) நீதிமன்றத்துக்குள் கண்டெடுக்கப்பட்டது.

மேலும், கொலையாளியும் அவருக்கு உதவிய பெண்ணும் சட்டத்தரணிகள் போன்று வேடமணிந்தமையால் சோதனைகளிலிருந்து தப்பி நீதிமன்றத்துக்குள் நுழைந்தனர். குற்றவியல் சட்டப் புத்தகத்தின் உள்புறத்தில் துப்பாக்கியின் வடிவத்தில் வெட்டப் பட்டு அதற்குள் துப்பாக்கியை வைத்து மறைத்து எடுத்து வரப்பட்டுள்ளது. சட்டத்தரணியாக வேடமணிந்த பெண்ணே அதனை நீதிமன்றத்துக்குள் கொண்டுவந்துள்ளார்.

சட்டத்தரணிகள் பகுதிக்குள் இருந்த கொலையாளியிடம் அவர் துப்பாக்கியை கொடுத்துள்ளார் என்றும் விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

துப்பாக்கிதாரியும் அவருக்கு உதவிய பெண்ணும் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இருவரும் பல்வேறு குற்றங்களுடன் தொடர்புடையவர்கள் என்று தெரிவித்த பொலிஸ் பேச்சாளர். இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை நடத்த 5 பொலிஸ் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன என்றும் கூறினார்.

கணேமுல்லை சஞ்சீவ ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் குழுவின் முக்கியஸ்தராவார். இவர் கடந்த 2023 செப்ரெம்பர் 13ஆம் திகதி கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் வைத்து நேபாளத்திலிருந்து நாடு திரும்பியபோது கைது செய்யப்பட்டார்.

கைதானபோது அவரிடம் போலி கடவுச்சீட்டு இருந்தது. படகு மூலம் இந்தியாவுக்குள் நுழைந்து அங்கிருந்து நேபாளத்துக்கு சென்ற அவர், சர்வதேச சிவப்பு பிடியாணை பிறப்பிக்கப்பட்ட பின்னர் நாட்டுக்கு திரும்பியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# வர்த்தமானி வெளியாகி 66 தினங்களுக்குள் உள்ளூராட்சி தேர்தலை நடத்த வேண்டும்!

### பவ்ரல் அமைப்பு தெரிவிப்பு

கொழும்பு, பெப். 20

உள்ளூராட்சி அதிகார சபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்ட மூலம் சட்டமாக அறிவிக்கப்பட்டு வர்த்தமானியில் வெளியிடப்பட்டதன் பின்னர், அன்றைய தினத்திலிருந்து 52 முதல் 66 நாட்களுக்குள் தேர்தல் நடத்தி முடிக்கப்பட வேண்டும் என்று பவ்ரல் அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

நேற்று அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், உள்ளூராட்சி அதிகார சபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்ட மூலம், சட்டமாக அறிவிக்கப்பட்டு வர்த்தமானியில் வெளியிடப்பட்டதன் பின்னர் தேர்தலை நடத்துவதற்கான முழுமையான அதிகாரம் தேர்தல் ஆணைக்குழுவுக்கு கிடைக்கப் பெறும்.

குறித்த சட்ட மூலத்தில் 3 மாதங்களுக்குள் வேட்புமனுவை கோருவதற்கு ஆணைக்குழு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதும் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, அது குறித்த தீர்மானங்களை எடுப்பதற்கு ஆணைக்குழுவுக்கு எவ்வித தடைகளும் கிடையாது. வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படும் நாளிலிருந்து 52 நாட்களுக்குள் தேர்தலை நடத்துவதற்கான அதிகாரம் தேர்தல் ஆணைக்குழுவுக்கு உண்டு. அதற்கான ஆகக் குறைந்த கால அவகாசம் 52 நாட்கள் என்பதோடு, ஆகக் கூடிய கால அவகாசம் 66 நாட்களாகும். இதற்கமைய ஏப்ரல் இறுதி வாரத்துக்குள் தேர்தல் நடத்தி முடிக்கப்பட வேண்டும்.

எவ்வாறிருப்பினும், கல்வி பொதுத் தராதர சாதாரண தர பரீட்சைகள், தமிழ் - சிங்கள புத்தாண்டு உள்ளடவை தொடர்பில் அவதானம் செலுத்த வேண்டிய கடப்பாடும் தேர்தல் ஆணைக்குழுவுக்கு இருக்கிறது.

பரீட்சைகளுக்கு இடையூறு ஏற்படாத வகையில் தேர்தலை நடத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுப்படு தேர்தல் ஆணைக்குழுவின் பொறுப்பாகும். இதேபோன்று இவ்விடயத்தில் அரசியல் கட்சிகளுக்கு பெரும் பொறுப்புகள் காணப்படுகின்றன. - என்றார். (ஐ)

# கிழக்கின் அபிவிருத்தி பக்கத்து நாட்டிடம்!

### சிறீநேசன் எம். பி.

கொழும்பு, பெப். 20

2025ஆம் ஆண்டு வரவு - செலவு திட்டத்தில் கிழக்கு மாகாணம் குறித்து எதுவும் குறிப்பிடப்படவில்லை. கிழக்கின் அபிவிருத்தி பக்கத்து நாட்டுக்கு வழங்கப்பட்டுள்ளது என்று இலங்கை தமிழ் அரசு கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஞா. சிறீநேசன் தெரிவித்துள்ளார். நேற்று பாராளுமன்றில் அவர் உரையாற்றிய போதே மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், வரவு - செலவு திட்டத்தில் பல முற்போக்கான விடயங்கள் இருப்பதை வரவேற்கிறோம். தமிழர் பாரம்பரியத்தை உலகுக்கு எடுத்துரைத்த யாழ் நூலகம் தேர்தலுக்காக தீக்கிரையாக்கப்பட்டது என்று ஜனாதிபதி குறிப்பிட்டிருந்தார். ஆம் அது உண்மையே. முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனவின் செல்லப்பிள்ளைகளாக இருந்த காமினி திசாநாயக்க, லலித் அத்துலத்முதலி, ரணில் விக்கிரமசிங்க ஆகியோரின் பெயர்களும் யாழ். நூலக எரிப்புடன் குறிப்பிடப்பட்டது.

வரவு - செலவுத் திட்டத்தில் யாழ். நூலகத்தை புனரமைப்பதற்கு 10 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதை வரவேற்கிறோம். அத்துடன், யுத்தத்தால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு வட்டுவாக்கல் பாலத்தை புனரமைப்பதற்கும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதனையும் வரவேற்கிறோம்.

2025ஆம் ஆண்டு வரவு - செலவு திட்டத்தில் கிழக்கு மாகாணம் குறித்து எதுவும் குறிப்பிடப்படவில்லை. கிழக்கின் அபிவிருத்தி பக்கத்து நாட்டுக்கு வழங்கப்பட்டுள்ளது. 30 ஆண்டுகால யுத்தத்தில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் மிக மோசமாக பாதிக்கப்பட்டன. அதேபோல் அண்மையில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு காரணமாக கிழக்கு மாகாணத்தின் விவசாய நிலங்களும் உட்கட்டமைப்பும் குடியிருப்புக்களும் பாதிக்கப்பட்டன. ஆகவே, அபிவிருத்தி எனும் போது கிழக்கு மாகாணத்தை புறக்கணிக்க முடியாது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் படுவான்கரை, எழுவான்கரை ஆகிய பகுதிகளை நிலத்தால் இணைக்க வேண்டும் என்று பல ஆண்டுகாலமாக தொடர்ச்சியாக வலியுறுத்துகிறோம். இவ்விடயம் குறித்து அரசாங்கம் விசேட கவனம் செலுத்த வேண்டும் என்பதை உரிய தரப்புக்கு சுட்டிக்காட்டுகிறேன்.

கடந்த காலங்களில் பச்சை கட்சி ஆட்சியிலும் நீலக் கட்சி ஆட்சியிலும் மொட்டு கட்சி ஆட்சியிலும் மாகாணங்களுக்கிடையில் வேறுபாடுகள் காணப்பட்டன. தற்போது சிவப்பு கட்சி ஆட்சியில் உள்ளது. ஆகவே, அனைத்து மாகாணங்களும் சமத்துவமாகப் பார்க்கப்பட வேண்டும். கிழக்கு மாகாணத்தை பிரதிநிதித்து வப்படுத்தி ஆளும் தரப்பிலும் எதிர்த் தரப்பிலும் உறுப்பினர்கள் உள்ளார்கள். ஆகவே, கிழக்கு மாகாணத்துக்கான அபிவிருத்தியில் கரிசனை கொள்ளுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன் - என்றார். (ஐ)

## சஞ்சீவ..

சந்தேகநபர் கைது செய்யப்பட்ட போது அவரிடமி ருந்து போலியான வழக்கறிஞர் அடையாள அட்டை இருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

## செம்மணி...

யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றின் கவனத்துக்குக் கொண்டு சென்றனர். இதையடுத்தே, நீதிவான் இன்றைய தினம் அந்தப் பகுதிக்கு நேரில் சென்று பார்வையிடவுள்ளார்.

1995 ஆண்டு விடுதலை புலிகளிடமிருந்து யாழ்ப்பாணத்தை இராணுவம் கைப்பற்றியிருந்தது. அந்தச் சமயம் நூற்றுக்கணக்கானவர்களை இராணுவத்தினர் பிடித்து சென்று காணாமல் ஆக்கினர். இவர்களில் பலர் செம்மணி பகுதியில் கொன்று புதைக்கப்பட்டனர் என்று தகவல்கள் வெளியாகியிருந்தன. 1999 ஆம் ஆண்டு இந்தப் பகுதியில் நடத்தப்பட்ட அகழ்வில் 15 மனித எச்சங்கள் கண்டறியப்பட்டன என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ-05)

## வேலன் சுவாமி...

திகதி - பௌர்ணமி தினத்தன்று நடத்தப்பட்ட போராட்டம் தொடர்பில் வாக்குமூலம் பெறுவதற்காகவே இன்று வியாழக்கிழமை நண்பகல் 12 மணிக்கு பலாலி பொலிஸ் நிலையத்துக்கு வருமாறு வேலன் சுவாமிக்கும் கஜேந்திரனுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

தையிட்டியில் தமிழ் மக்களின் காணிகளை அபகரித்து அமைக்கப்பட்ட திஸ்ஸ விகாரையை அகற்ற வேண்டுமெனக் கோரி கடந்த 11, 12ஆம் திகதிகளில் போராட்டம் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# மன்னார் கனிய மணல் அகழ்வு பிரச்னையை ஆராய்ந்து தீர்வு!

## அரசாங்கம் நேற்று அறிவிப்பு

கொழும்பு, பெப். 20

**மன்னாரில் கனிய மணல் அகழ்வுப் பிரச்னையை ஆராய்ந்து தீர்வைப் பெற்றுக்கொடுப்பதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.**

பாராளுமன்றம் சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன தலைமையில் நேற்றுக் காலை கூடியபோது, கனிய மணல் அகழ்வு தொடர்பில் பொலிஸாருக்கும் பொதுமக்களுக்கும் இடையே முறுகல் நிலை தோன்றியுள்ளதாக செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. சபையின் கவனத்துக்கு கொண்டுவந்தார்.

இதற்கு பதிலளித்த சபை முதல்வரும் அமைச்சருமான பிமல் ரத்நாயக்க, ஆராய்ந்து தீர்வைப் பெற்றுக்கொடுப்பதாக அறிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மன்னாரில் கனிய மணல் அகழ்வுக்கு அனுமதி பெறப்பட்டுள்ளது. அது, கடந்த அரசாங்கத்தால் வழங்கப்பட்டுள்ளது.

இந்த விடயத்தில் முறையாக அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளப்பட்டதா என்பதில் சந்தேகம் உண்டு.

மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கனிய மணல் அகழ்வுக்கு தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டபோதிலும் நாட்டில் சட்டம் என்ற ஒன்று நடைமுறையில் இருக்கிறது. மன்னார் மக்கள், சுற்றுச் சூழல், அதனால் ஏற்படும் பாதிப்புகளை நாம் கருத்திற் கொள்கிறோம். கடந்த அரசாங்கத்தினால் மதுபான அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டதைப் போன்றுதான் கனிய மணல் அகழ்வுக்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதற்கும் நாமே பொறுப்புக் கூறவேண்டியவர்களாக இருக்கிறோம். இந்த விடயம் தொடர்பில் ஆராய்ந்து உரிய நடவடிக்கை எடுப்போம் - என்றார். (அ)

# மன்னாரில் முன்னெடுக்கப்படவிருந்த கனிய மணல் ஆய்வுப் பணி நிறுத்தம்!

மன்னார், பெப். 20

23 அரச நிறுவனங்களின் பங்குபற்றுதலுடன் மன்னாரில் நேற்று முன்னெடுக்கப்படவிருந்த கனிய மணல் ஆய்வுப் பணிகள் இடைநிறுத்தப்பட்டன.

ஏற்கனவே, இரண்டு சந்தர்ப்பங்களில் இந்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோதிலும் பொதுமக்களின் எதிர்ப்பை அடுத்துக் குறித்த செயற்பாடுகள் இடைநிறுத்தப்பட்டன.

அவ்வாறான எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவதற்கு 10 பேருக்குத் தடை விதித்து மன்னார் நீதிமன்றினால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

இவ்வாறான செயற்பாடுகள் காரணமாக மக்கள் பாதிப்படைவதாக பாராளுமன்ற உறுப்பினர்களால் நேற்று முன் தினமும் நேற்றும் பாராளுமன்றில் எடுத்துரைக்கப்பட்டன.

இந்த நிலையில், பொலிஸாரின் பாதுகாப்புடன் அங்கு கனிய மணல் ஆய்வுப் பணிகள் நேற்று முன்னெடுக்கப்பட விருந்தபோதிலும், பாராளுமன்றில் இருந்து கிடைக்கப்பட்ட அறிவுறுத்தல் ஒன்றுக்கு அமைய, அந்தப் பணிகள் இடைநிறுத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. (அ)

# கையகப்படுத்தப்பட்ட காணிகளை விடுவிக்காமல் எப்படி உற்பத்தி பொருளாதாரம் பற்றிப் பேசலாம்?

## சத்தியலிங்கம் எம்.பி. சபையில் கேள்வி



கொழும்பு, பெப். 20

நாட்டில் வாழும் ஒரு தரப்பினர் அரசியல் ரீதியாகத் தாழ்த்தப்பட்டு இருப்பது பொருளாதாரத்தில் பாரிய பின்னடைவை ஏற்படுத்தும் என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.

எதிர்பார்க்கும் பொருளாதார அந்தஸ்தை அடைவதற்கு அரசியல் பிரச்னை தீர்க்கப்பட வேண்டும் என அவர் சுட்டிக்காட்டினார்.

பாராளுமன்ற அமர்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைக் கூறினார்.

உற்பத்தி பொருளாதாரத்தை முன்னெடுப்பதற்குத் தமிழ் மக்கள் ஆர்வமாக இருந்தாலும் அதற்கான காணிகள் இன்றி அவர்கள் உள்ள தாக அவர் குறிப்பிட்டார்.

யுத்த காலத்தில் கையகப்படுத்தப்பட்ட பொதுமக்களுடைய காணிகள் முழுமையாக விடுவிக்கப்படவில்லை எனச் சபையில் அவர் சுட்டிக்காட்டினார்.

இவ்வாறு இருக்கையில் எப்படி உற்பத்தி பொருளாதாரத்தைப் பற்றி பேசுவது எனக் கேள்வியெழுப்பி னார். (அ)

# ஏனைய பேக்கரி உற்பத்திகளின் விலையைக் குறைக்க முடியாது!



கொழும்பு, பெப். 20

கோதுமை மாவின் விலையை 10 ரூபாவால் குறைத்ததன் அடிப்படையில் பாணின் விலை 10 ரூபாவால் குறைக்கப்பட்டாலும் ஏனைய பேக்கரி உற்பத்திகளின் விலையை குறைக்க முடியாது என அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் என்.கே. ஜயவர்தன தெரிவித்தார்.

கோதுமை மாவின் விலையை 25 ரூபாவால் குறைக்கப்பட்டிருப்பின் நிச்சயமாக ஏனைய பேக்கரி உற்பத்திகளின் விலையை 10 ரூபாவால் குறைக்க முடியும் என அவர் கூறினார்.

நாட்டில் அதிக இலாபம் பெறும் இரண்டு கோதுமை மா உற்பத்தி நிறுவனங்களால் 10 ரூபாவுக்கு மேலதிகமாக கோதுமை மாவின் விலையை குறைக்க முடியும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார். (அ)

# கதிரை சின்னத்தில் சு.கா.

கொழும்பு, பெப். 20

தேர்தல்கள் ஆணைக்குழு தேர்தலுக்கான வர்த்தமானியை வெளியிட்ட பின்னர் தனது கட்சி கதிரை சின்னத்தில் போட்டியிடும் என சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்தார்.

சுதந்திரக் கட்சி தலைமையகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

தேர்தல்கள் ஆணைக்குழு இன்னுமும் தேர்தல் வர்த்தமானியை வெளியிடவில்லை.

நாம் சுதந்திரக் கட்சியின் கதிரை சின்னத்தில் போட்டியிடுவோம். அதற்கு தயாராக உள்ளோம். வேட்புமனுக்கள் எப்போது தாக்கல் செய்யப்படும், எந்த திகதியில் நடைபெறும் என்பதற்காக எங்கள் வேட்பாளர்கள் காத்திருக்கிறார்கள்.

விரைவில் வெளியிடப்படும் என்று நம்புகிறோம். வேட்பாளர்கள் இந்தத் தேர்தலில் போட்டியிடத் தயாராகி வருகின்றனர்.

இதேவேளை, தற்போதைய அரசாங்கம் மூலம் முன்வைக்கப்பட்ட இந்த வரவு - செலவுத் திட்டம், வரவிருக்கும் உள்ளூராட்சித் தேர்தலில் அவர்களின் வெற்றிக்காகவே என்பது மிகத் தெளிவாகத் தெரிகிறது. ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் ஏமாற்றப்பட்டது போலவே, உள்ளூராட்சித் தேர்தலிலும் ஓரளவுக்கு மக்களை ஏமாற்றும் வகையில் வரவு - செலவுத் திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது - என்றார். (அ)

# நாட்டின் தேசிய பாதுகாப்புக்கு பெரும் அச்சுறுத்தல் நிலைமை!

## நாமல் ராஜபக்ஷ சுட்டிக்காட்டு



கொழும்பு, பெப். 20

நாட்டின் தேசிய பாதுகாப்பு அச்சுறுத்தலில் இருப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

நாட்டின் பாதுகாப்புக்குக் குறைந்தளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் மக்கள் எங்கும் சுதந்திரமாகப் பயணிக்க முடியும் எனவும் அரசாங்கம் தெரிவித்தது.

இவ்வாறு அரசாங்கம் குறிப்பிட்டு ஓரிரு நாட்களில் கொலைச் சம்பவங்களே அரங்கேறியுள்ளன என நாமல் ராஜபக்ஷ சுட்டிக்காட்டினார்.

நேற்று முன் தினம் இரவு இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பத்தை சுட்டிக்காட்டி நாமல் ராஜபக்ஷ, நேற்று பாராளுமன்ற அமர்வில் உரையாற்றியிருந்தார்.

மேலும் நேற்று நீதிமன்றத்துக்குள் நீதிபதியின் முன்பே துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

உயிரிழந்தவரின் நடத்தை எவ்வாறு இருப்பினும் நீதிமன்றத்துக்குள் இவ்வாறான அசம்பாவிதங்கள் அரங்கேறுவது பாதுகாப்பைக் கேள்விக்குள்ளாக்கும் செயற்பாடு என நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

இதேபோல் அண்மையில் மன்னார் நீதிமன்றத்துக்கு அருகில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தையும் அவர் நினைவுபடுத்தினார்.

இவ்வாறான சூழலில் எவ்வாறு நாட்டுக்கு முதலீட்டாளர்களை அரசாங்கம் அழைக்க முடியும் என அவர் கேள்வியெழுப்பினார்.

நாட்டில் முதலீடுகளை முன்னெடுத்த முதலீட்டாளர்களும் இடைநடுவே திட்டங்களைக் கைவிட்டுச் சென்றுள்ளதாகவும் நாமல் எம்.பி சுட்டிக்காட்டினார்.

இவ்வாறான கொலைச் சம்பவங்கள் அரங்கேறுவது நாட்டின் சுற்றுலாத்துறையையும் பாதிக்கும் என அவர் குறிப்பிட்டார்.

அரசாங்கத்தின் செயற்பாடுகள் அச்சாறு போன்று உள்ளதாகவும் நாமல் தெரிவித்தார்.

நாட்டில் தற்போது இடம்பெற்று வரும் இவ்வாறான செயற்பாடுகள் தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும் என அவர் கோரிக்கை விடுத்தார். (அ)

# பொது பாதுகாப்பு அமைச்சரை சந்தித்த இந்திய தூதர் சந்தோஷ்

கொழும்பு, பெப். 20

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபாலவுக்கும் இலங்கைக்கான இந்திய தூதுவர் சந்தோஷ் ஜாவுக்கு இடையிலான சந்திப்பு நேற்று புதன்கிழமை நடைபெற்றது.

இலங்கை மற்றும் இந்திய சட்ட அமுலாக்க நிறுவனங்களுக்கிடையிலான ஒத்துழைப்புக்களை மேம்படுத்துவது குறித்து இதன்போது இரு தரப்பு அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. (அ)

# நீதிமன்றத்துக்கு உள்ளேயே தனிநபர் உயிருக்கு ஆபத்து!

## பாராளுமன்றத்தில் சஜித்

கொழும்பு, பெப். 20

புதுக்கடை நீதவான் நீதிமன்றத்தில் இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகம் குறித்து எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்பியதால் குழப்பநிலை ஏற்பட்டது.

இது பாரதூரமான நிலைமை நீதிமன்றத்துக்குள்ளேயே தனிநபரின் உயிருக்கு ஆபத்து என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

நாளாந்தம் கொலைகள் இடம்பெறுகின்றன என தெரிவித்துள்ள எதிர்க்கட்சி தலைவர், இதற்கு தீர்வை காண்பதற்கு உடனடி நடவடிக்கை அவசியம் என குறிப்பிட்டார்.

நாட்டில் சட்டம், ஒழுங்கை பேணுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என வேண்டுகோள் விடுத்த அவர், இந்த விடயத்தில் அரசாங்கத்துக்கு உதவுவதற்கு எதிர்கட்சி தயாராகவுள்ளது என குறிப்பிட்டார்.

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 20.02.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org